|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 குரோதி ௵ ஆவணி - புரட்டாசி செப்டம்பர் 2024 இதழ் 9





## பித்ருப்யோ நம:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆவணி – புரட்டாசி

மலர் 13 செப்டம்பர் 2024 இதழ் 9

பொருளடக்கம்



ப்ரார்த்தனை 3
ஆசிரியர் பக்கம் 4
தெய்வத்தின் குரல் 7
பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
நீதிக் கதைகள் 11
பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
அனுக்கிரஹ பாஷணம் 14
பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் 17
முகாம் நிகழ்ச்சிகள் 18
ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்தோத்ரம் 21
புரட்டாசி மாத விசேஷ தினங்கள் 26
நாம ராமாயணம் 27
பித்ரு ஸ்துதி ப்ருஹத் தர்ம புராணம் 29
சாணக்ய ஸுபாஷிதம் 31
வேதாந்த ஸம்வத்ஸ்ரம் 33
அதவர்வண வேத ப்ரக்தி ஸூக்தம் – விஸ்வகீதம் 34
ஆச்சார்ய பரம்பரை 35
வேத ஆகம நெறிகளை பின்பற்ற வேண்டும் 37
மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ 42
ப்ரபோத சிந்தாமணி 44
ஆழ்வார்கள் சரித்திரம் 45
முக ஸாரம் 47


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

*பித்ரு வந்தனம்*

*பிதாமஹ ப்ரபிதாமஹ யே ச த்வாமன்வத்ர*
*பிதரோ யதாபாகம் மந்தத்வம்*
*நமோ வ: பிதரோ ரஸாய நமோ வ: பிதர: ஶுஷ்மாய*
*நமோ வ: பிதரோ ஜீவாய நமோ வ:பிதர: ஸ்வதாயை*
*நமோ வ: பிதரோ மன்யவே*
*நமோ வ: பிதரோ கோராய பிதரோ நம:*
*வோ யேதஸ்மின் லோகே ஸ்த யுஷ்மாம்ஸ்தே அனு*
*யே அஸ்மின் லோகே ஸ்த யூயம் தேஷாம் வஸிஷ்டா பூயாஸ்த*
*யே அஸ்மின் லோகே அஹம் தேஷாம் வஸிஷ்டோ பூயாஸம்*

*பொருள் : பிதாமஹ ப்ரபிதாமஹர்களே அவர்களைத் தொடர்பவர்களே! பித்ருக்களே உங்கள் அவ்ய பாகத்தை அனுபவியுங்கள். ரஸமாயிருக்கும் பித்ருக்களுக்கு நமஸ்காரம். பலமாயிருக்கும் பித்ருக்களுக்கு நமஸ்காரம். ஜீவனாயிருக்கும் பித்ருக்களுக்கு நமஸ்காரம். பித்ருக்களின் ஸ்வதாவிற்கு நமஸ்காரம். பித்ருக்களின் கோபத்திற்கு நமஸ்காரம், கோர பித்ருக்களுக்கு நமஸ்காரம் பித்ருக்களுக்கு நமஸ்காரம், அவ்வுலகில் இருக்கும் உங்களை அவர்கள் தொடரட்டும், இவ்வுலகில் இருப்பவர்கள் என்னைத் தொடரட்டும், இவ்வுலகில் இருப்பவர்களாகிய நீங்கள் செழியுங்கள். இவ்வுலகில் இருக்கும் நான் உங்கள் அருளால் செழிப்பேனாகுக.*

*ஹே! பித்ருக்களே நீங்கள் சௌம்யமானவர்கள். நீங்கள் எமக்கு ஸந்ததி, செல்வம், நீண்ட ஆயுள் இவைகளை தர ஆகாச மார்கமாக வருக. ஹே! தர்பையே நீ ஒரு முறை என்னால் அறுக்கப்பட்டாய். உன்னை பரப்புகிறேன். எம் பித்ருக்களுக்கு அதி ம்ருதுவான ஆஸனமாக இரு. என் அப்பா, தாத்தா, கொள்ளுத் தாத்தா, அம்மாவின் அப்பா, தாத்தா, கொள்ளுத் தாத்தா அமரட்டும். தாழ்ந்தவர்களும் சிறந்தவர்களுமான நம் பித்ருக்கள் நாம் அளிக்கும் உணவை ஏற்று அருள் புரியட்டும். ஸிக்ஷிக்கத் தகுந்த குற்றம் புரிந்திருந்தாலும் நம்மை ஹிம்சிக்காமல் நாம் அளித்ததை ஏற்று நன்றி உள்ளவர்களாகி நம்மைக் காப்பாற்றட்டும்.*

*யஜுர்வேத தர்ப்பண மந்த்ரங்கள்*

# ஆசிரியர் பக்கம்

*''மத மாற்றம் நடக்கும் கூட்டங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையெனில் நாட்டின் பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையராக மாறிவிடுவர்''*

*[அலகாபாத் உச்சநீதி மன்றம் தீர்ப்பு]*

*இந்த விஷயம் சாதாரணமானதல்ல. விசாரிக்கப்பட வேண்டியது. மற்றும் விசனிக்கப்பட வேண்டியது. பலவிதமாக இந்த மத மாற்றம் நடைபெற்று வருகிறது.*

*ஹிந்துக்கள் கவலைப்படாமலுள்ளனர். இந்த மாதிரி எதுவும் இல்லை என்று சில சக்திவாய்ந்த பத்ரிகைகள், மீடியாக்கள் சொல்லும். இன்னொரு பக்கம் ஐயோ! நிமிஷத்திற்கு மத மாற்றம் நடைபெறுகிறது என்று சிலர் அங்கலாய்ப்பர். உண்மை இந்த இரண்டுக்கும் நடுவில்தான் உள்ளது ஆப்ரகாமிய மதங்களின் உள் நோக்கமே மத மாற்றம் தான்.* Article *26 தந்த தைரியத்தில் இவர்கள் மத மாற்றம் எமது உரிமை என்று கூறுவர். உண்மையில் அவர்களது மத ப்ரசாரத்திற்கு அனுமதி தரப்பட்டுள்ளதே தவிர மத மாற்றத்திற்கு அல்ல.*

*'மகமதியர்கள் வாளைக் காட்டி மதம் மாற்றினர். கிறிஸ்தவர்கள் பொது சேவை, பணம் முதலியவைகளைக் காட்டி மதம் மாற்றினர்.' என்று பெரியவா கூறுவார். அந்த காலத்தில் இது உண்மை. இக்காலத்தில் வேறு ரூபத்தில் மத மாற்றம் நடக்கிறது.*

Love jihaad *என்பதன் மூலம் ஹிந்துப் பெண்கள் குழப்பப்பட்டு முஸ்லிம் பையனை மதம் மாறி மணக்கிறாள். நிறைய ஹிந்து சொத்துக்களை வாங்குகிறார்கள். தாங்கள் வசிக்கும் இடமாக ஆக்குகிறார்கள். அதிக பணம் வருவதால் ஹிந்துக்கள் சொத்துக்களை அபாயம் அறியாமல் விற்கிறார்கள்.*

*மேற்கு வங்காளத்தில் பங்களாதேசத்திலிருந்து வரும் முஸ்லிம் அகதிகள் நிரந்தரமாக இங்கேயே தங்குகின்றனர். மேலும் அவர்கள் நடத்தும் கடைகள், வணிக நிலையங்கள் ஹிந்து பேரிலேயே இருக்கும்.* Crypto Muslim *போன்ற பெயர்களை இந்துவாக்கி சலுகை கேட்பர் கிறிஸ்தவர்கள். இது ஒரு* Crypto Christianism. *இப்படிப் பல விதங்களில் பல உருவங்களில் மாற்று மதத்தினர்*

அதிக அளவில் உள்ளனர். Majority சமூகம் Minority ஆக வாய்ப்பு உள்ளது. நீதிமன்றத்தின் கவலை உண்மையானதே.

மேலும் நாடு துண்டாடப்படும் அபாயமும் உள்ளது. ‘எம்மதமும் ஸம்மதமே’ என்று சிலர் சொல்வர். இது ஆபத்தானது. சம்மதமென்றால் அம்மதத்திற்கே போக நேரிடும் அபாயம் உள்ளது. மாற்று மதங்களை மதிக்கும் அதே நேரத்தில் நம் மதத்தின் பெருமையை உணர வேண்டும். இந்த விஷயம் பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. Secularism என்னும் போர்வையில் இந்த ஸனாதன மதம் பரிகாசத்திற்கு ஆட்படுகிறது. உண்மையில் நம் மதம் ஒன்றுதான் secular.

மற்ற மதங்களை மதிக்கும் மதம் நம் மதம்.

இதை மாற்ற நாம் செய்ய வேண்டியது என்ன ?

1. அனைத்து மக்களுக்கும் நம் மதத்தின் சாரத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். மற்ற மதங்களைப் போல் மதக் கல்வி அவஸ்யம். பாமர மக்களை இதில் ஈடுபடுத்த வேண்டும். ஸத் சங்கம், வார வழிபாடு, பூர்த்த தர்மங்கள் இவைகளில் மாணவ மாணவிகளை ஈடுபடுத்த வேண்டும். குறைந்த விலையில் விற்க நேரிடினும் நமது சொத்துக்களை மாற்று மதத்தினருக்கு விற்கக் கூடாது. இதனால் அவர்களது ஆக்ரமிப்பு குறையும்.


2. நம் மதத்தின் பெருமையை அச்சிட்டு கையேடுகளாக ப்ரசாரம் செய்யலாம். அரசியல் நிர்ணயச் சட்டத்தில் சில மாற்றங்களை கொண்டு வருதல் அவஸ்யம். நான் சுட்டிக் காட்டியவை சிலதான். ஆர்வத்துடன் செய்தால் வெற்றி நிச்சயம். மதம் மாறும் மனங்கள் மாறும். மத மாற்றம் குறையும் என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர!

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஹிந்து மதமும் மதமாற்றமும்; முதல் மாற்றத்தைச் சரி செய்யும் மறுமாற்றம்



பிறரைத் தம் மதத்திற்கு மாற்றும் கொள்கையை அடியோடு கைக்கொள்ளாத ஒரே பெருமிதமான ஹிந்து மதத்திற்கு இவ்வாறு அதன் கொள்கைகளில் சுய விருப்பம் ஏற்பட்டதன் மீதேதான் பிற நாட்டு நல்லறிஞர், அநுபவிகள் ஆகியோர் ஈர்க்கப் பெற்று அதனைத் தழுவியிருக்கின்றனர் என்பது கவனத்திற்குரியது.

ஹிந்து மதத் தலைவர்களும் பழங்காலங்களில் பவுத்த - சமண மதத்தினரை ஹிந்து மதத்திற்கு மாற்றியுள்ளனரே என எதிர்க் கேள்வி விடுக்கலாம். இதற்கு நமது விடை, அதற்கு முற்காலங்களில் ஹிந்துக்களாகவே இருந்து அப்புறச்சமயிகளின் பிரசாரத்தால் அச்சமயம்களுக்கு மாறியோரைத்தான் அத் தலைவர்கள் மீண்டும் தாய்ச் சமயத்திற்கு மாற்றினர் என்பதேயாம்.

பிற்காலங்களிலோ ஹிந்து மதத் தலைவர்கள் அவ்விரு பிற மதங்களில் தலைமுறைகளாக இருந்து வந்த ஆதி ஹிந்துக்களை மீண்டும் தாய்ச் சமயம் மாற்றுவதில் ஈடுபடவில்லை. ஹிந்துக்களில் புதிய தலைமுறையினர் அம்மதங்களுக்கு இழுக்கப்படுவதை மட்டுமே தடுக்க முயற்சி செய்யலானார்கள்.

கவனத்திற்குரிய ஒன்றுண்டு, யாதெனில், இந்நாட்டிலேயே தோன்றிய பவுத்த - சமண சமயங்களுக்கு வேறாகப் பிறநாட்டுச் சமயத்தினருக்கும் கிறிஸ்து சமயம் தோன்றியதற்கு முன்பிருந்தே, அலெக்ஸாந்தர் காலத்திலிருந்து நம் நாட்டுடன் தொடர்பு உண்டாகி, அவர்கள் அரசியல் ரீதியிலும், வாணிப ரீதியிலும் இங்கு குடியேறினரெனினும் அவர்களை ஹிந்து சமயத்திற்கு மாற்ற ஹிந்துக்கள் எண்ணியதுகூட இல்லை.

பின்னாளில் முசல்மான்களும், கிறிஸ்துவர்களும் இங்கு பெருமளவில் பிரவேசித்து, அதோடு நில்லாது, ஹிந்துக்களை வலிவுடனேயே மத மாற்றம் செய்த போதுங்கூட, பிறப்பாலேயே அப்பிற மதத்தாராக இருந்தோரை ஹிந்துக்களாக மாற்ற ஹிந்துக்கள் எண்ணவில்லை. அதனினும் குறிப்பிடத்தக்கதாக, அப்பிற மதங்களை ஏற்கனவே தழுவிவிட்ட ஹிந்துக்களைக்கூட மீண்டும் தாய்மதம் மாற்றாமல் புதிதாக மேன்மேலும் ஹிந்துக்கள் அம்மதங்களுக்கு இழுக்கப்படுவதைத் தடுப்பதற்காக மட்டுமே எதிர்ப் பிரசாரம் செய்தனர்.

கருத்தில் கொள்ளத்தக்க மற்றோர் அம்சம் உண்டு. யாதெனில், பொதுவாக ஹிந்து சமய மன்னர்கள் யாவரும் அந்த எல்லாப் புறச்சமயிகளும் அவரவரது ஆலயங்களை இங்கு எழுப்பிக் கொள்ளத் தாராளமாக அனுமதித்தனர். அவர்களில் பலர் சமய சமரஸத்தில் மேலும் ஒரு படி சென்று அப்புறச் சமய ஆலயங்களுக்கு மானியம் முதலியன அளித்தனர். இன்னும் சில மன்னர்களோ தாங்களே புறச்சமயங்களுக்காக ஆலயங்கள் எழுப்பித் தந்துமிருக்கின்றனர்.

மொத்தத்தில், ஹிந்துக்கள் தாமாக offensive -ல் எதிர்த்துச் சென்று தமது சமயத்திற்கு ஆள் சேர்த்ததே கிடையாது. மேன்மேலும் தம் மதத்தினரின் சங்கிலியை சிதைவுறாமல் தடுக்கும் தற்காப்பே ( defensive) அவர்கள் செய்தது.

ஹிந்து சமூகத்தினர் பழங்காலங்களில் பெருமளவில் செய்ததும், தற்காலத்தில் சிறிய அளவில் செய்ய ஆரம்பித்திருப்பதும் என்னவெனில் அம் மதத்திற்கு முன்னர் ஏற்பட்டிருந்த எதிர்ப்பை எதிர்த்துச் செய்யும் புனர் - மதமாற்றம் (re&conversion) தானேயன்றி, பிற மதத்தினராகவே இருப்போரை எதிர்த்துத் தம் மதத்திற்கு மாற்றம் செய்வதல்ல.

இந்த அம்சத்தில் பழங்காலத்தில் செய்ததற்கும் இன்று செய்ய ஆரம்பித்திருப்பதற்கும் மாறுபாடொன்றுண்டு. அன்று பாரதத்திலேயே தோன்றிய பிற சமயங்களுக்கு (பவுத்த - சமண மதங்களுக்கு) மாற்றப்பட்டோரை மீண்டும் ஹிந்து சமயத்திற்கு மாற்றினர். இன்று வெளிநாடுகளைச் சேர்ந்த பிற சமயங்களுக்கு அண்மைக் காலத்தில் மாற்றப்பட்டோரை ஹிந்து சமயத்திற்கு மாற்ற முயலப்படுகிறது. இம்மாறுபாட்டுக்குக் காரணம்: இங்கேயே தோன்றிய பர சமயங்களில் சரித்திரத்தின் போக்கில் இந்நாட்டில் பவுத்தம் எடுபட்டேவிட்டதெனுமளவுக்குச் சுருங்கிவிட்டது. சமணமோ ஹிந்து மத அம்சங்களில் பலவற்றைத் தன்னிற் கொண்டு அதன் சகோதர மதம் போலாகிவிட்டது.

மேலும் அவ்விரு மதத்தினர் இப்போது நமது நாட்டில் மதமாற்றத்தில் ஈடுபடவுமில்லை. மறுபுறத்தில், வெளிநாட்டுச் சமயங்களைச் சார்ந்தோரின் மதமாற்ற நடவடிக்கைகளோ இன்றும் தீவிரம் குன்றாமலே நடைபெறுகின்றன.

மீண்டும் கவனித்தற்குரிய விஷயம், இத்தகைய நிலவரத்திலுங்கூட ஹிந்துக்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் முசல்மான்களாகவும், கிறித்துவர்களாகவும் இந்நாட்டிற்கு வந்தோரின் வம்சத்தினரை ஹிந்துக்களாக மாற்றுவதல்ல, ஹிந்துக்களிலேயே சில தலைமுறைகளுக்கு முன் அப் புற மதங்களுக்கு மாறியோரின் வழி வந்தோரைக்கூட மீண்டும் ஹிந்துக்களாக்குவதற்கும் அல்ல. அண்மைக் காலத்தில் அவற்றுக்கு மாற்றப்பட்டோரை மீண்டும் தாய் மதத்திற்கு மாற்றுவதற்கே முயலப்படுகிறது.

## மதத் தொடர்பில்லாத உபாயங்கள்;
## கடும் தண்டனை விதித்தல் வேண்டும்

இதுவரை மதச்சுதந்திரம் பற்றிக் கூறியதெல்லாம் மத விஷயமாகவே பிரசாரம் செய்வது குறித்துத்தான். ஆனால் சரித்திரம் நிகழ்கால நடைமுறையில் காட்டியிருப்பதிலிருந்தோ, தவறான நோக்கம் கொண்ட மதப் பிரசாரம் என்பதைவிடவும் மிகவும் தவறாக, மதத் தொடர்பே இல்லாத உபாயங்களாலும் மதமாற்றம் செய்வதாக ஏற்பட்டிருக்கிறது. எந்தச் சமுதாயத்திலும் அறிஞர்களாகவும், அநுபவிகளாகவும் ஆய்ந்தோய்ந்து பார்க்க அறியாதவர்களாக உள்ளோரே மிகப் பெரும்பாலாராயிருப்பதற்கேற்பவே ஹிந்து சமுதாயத்திலுமுள்ள அப்படிப்பட்ட பாமர மக்கள் இம்முறைகளால்தான் கூட்டம் கூட்டமாக மதமாற்றம் கண்டுள்ளனர்.

இவ்வுபாயங்கள் இரண்டு வகையானவை. இரண்டும் மத அம்சங்களை விளக்கி அவற்றால் பிற மதத்தினருக்கு அதில் சுயமான பற்றுதல் ஏற்படுத்தாதவையே.

ஒன்று பலவந்தம்: மிரட்டி உருட்டிக் கட்டாயக் கெடுபிடியால் மதமாற்றம் செய்வது. ஒரு மதஸ்தரன் ஆட்சி ஏற்படுகையில் பிற மதஸ்தருக்கு வரி விதிப்பது போன்ற நடவடிக்கைகளும் இப்பலவந்தத்தைச் சேர்ந்தனவே.

இரண்டாவது, வசிய உபாயம் : கல்வியளிப்பது, நோய்ப் பிணி தீர்ப்பது, ஏனைய சமூக நலன்களைச் செய்வது ஆகியவற்றை மத ஸ்தாபனங்களின் மூலம் செய்து, உதவி

பெறுவோருக்கு உதவி செய்வோரிடம் ஒரு கட்டுப்பாடு உண்டாக்கி, அதை நேர்முகமாகவோ சாதுரியமாகவோ எடுத்துக்காட்டி மதமாற்றம் செய்வது.

இவை யாவற்றினும் கேவலம், லஞ்சமாகப் பொருள் கொடுத்தே ஒரு மதத்தினரை வேறு மதத்துக்கு மாற்றுவது.

பலவந்தம், வசியம் ஆகிய இவ்விரண்டுமே பொய்ப் பிரசாரத்தைவிடவும் தவறான வஞ்சகச் செயற்பாடாக இருப்பதால் சட்டபூர்வமாகப் பெருங்குற்றமாக்கப்பட்டு அவற்றுக்குக் கடும் தண்டனை விதிக்க வேண்டும்.

பிறிதொன்றும் உண்டு. ஒரு பிரஜையின் மதச் சுதந்திரம் என்பது அந்நபர் சுதந்திரமாகச் சுய விருப்பத்தில் ஒரு மதத்தைத் தழுவியிருப்பதற்கான உரிமையாகும். இது அவரது உள்ள உயர்வு என்ற மிகவும் உத்தமமான விஷயம் குறித்ததாகும். உள்ள உயர்வு கண்ட பிரஜைகளால்தான் ஒரு நாட்டின் நல்வாழ்வே என்பதால் அதற்கு ஊறு விளைவித்தால் அது சாதாரணக் குற்றங்களில் சேராமல் பெரிய குற்றங்களிலேயே சேரும். மதச் சுதந்திரம் என்பது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்றுவிடும் போது அச்சுதந்திரத்தில் குறுக்கிடுவதும் மிகப்பெரும் குற்றமாகும் என்ற காரணத்தையும் கருத்தில் கொண்டால், பொய்ப் பிரச்சாரம், பலவந்தம், வசிய உபாயம் ஆகிவற்றால் மதமாற்றம் செய்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பது தெரியும். எனவே அதற்குரிய கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். ஒருவர் தண்டனைக்காக அஞ்சியே குற்றத்தில் புகாதபடி தடுப்பதான punishment என்ற கடுந்தண்டனைக்கான குற்றமாகவே அது சட்டபூர்வமாக ஆக்கப்பட வேண்டும்.

ஆனால் வசிய உபாயத்தால் மதமாற்றம் செய்யப்படும் போது, அதைக் கண்டுபிடித்து நிரூபிப்பது கடினமாக இருக்கும் எனத் தெரிய வருகிறது. சுய மதத்தினர் மாத்திரமின்றி சகல மக்களும் நல்வாழ்வு பெற உதவி புரிய வேண்டுமென்று தமது மதம் சொல்வதால், அந்த அடிப்படையிலேயே ஒருவரது மதத்தைக் கருதாது அனைவருக்கும் சமூக நலப்பணிகள் செய்வதாக இந்த உபாயத்தைக் கைக் கொள்வோர் கூறித் தப்பித்துக் கொள்ள முடியும், என்றாலும் உதவி பெற்றோர் எத்தகையோர் என்பதை, அவர்களின் சமூகநிலை, அறிவுநிலை, அவர்களில் மதம் மாறியோரின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தீர்க்கமாக அலசிப் பார்த்து ஆழ்ந்து விசாரணை செய்வதால் உண்மையைக் கண்டுபிடித்து விடலாம். நாட்டினரின் மனவளர்ச்சியில் தனது பொறுப்பை ஓர் அரசாங்கம் உணர்ந்திருந்தால், அது இந்தக் குற்றத்தையும் கொள்ளை, கற்பழிப்பு

முதலிய குற்றங்களோடு சேர்த்து வைத்து முக்கியமான கவனம் தந்து தீர்க்கமான புலன் விசாரணை செய்தல் வேண்டும். உள்ளவுயர்வுக்கே ஊறு விளைவித்து, ஒருவரது கொள்கை நோன்பைக் குலைப்பது கொள்ளையடிப்பதோடும் கற்பழிப்பதோடும் சேர்த்து மதிக்கப்பட வேண்டியதேயாகும்.

உண்மைகளையே உரிமையாக்கித் தரத்தான் தர்மம். தர்மத்தை அமல் செய்யத்தான் சட்டம். எனவே சட்ட பூர்வமாக மதச் சுதந்திர உரிமை அளிக்க அரசாங்கம் முற்படுகையில், 1. சுய விருப்பம் ஒன்றின் மீதேயும், 2. ஒரு மதத்தின் கொள்கை, நடைமுறைப் பயிற்சி ஆகியவற்றில் மட்டுமே அச்சுய விருப்பம் இருக்கும் போதும்தான் மதமாற்றம் நடைபெறுகிறது என்ற உறுதிப்பாட்டை உண்டாக்குவதற்கு உதவியாகவும் ஒரு சட்டவிதி இயற்றுதல் அவசியமாகிறது. மத சம்பந்தமேயில்லாத உபாயங்களால் மதமாற்றம் செய்வதைத் தடுக்கும் பொருட்டே இவ்வுறுதிப்பாடு அவசியமாகிறது.

மதப் பிரசாரம் என்பது ஒரு மதத்திலுள்ளோருக்கே அதனை நன்கு பிரகாசப்படுத்திப் பற்றுதலை வளர்த்துக் கொடுக்கும் நோக்கத்திற்காக இன்றி, பிற மதத்தினரையும் அதற்கு மாற்றும் நோக்கத்தைக் கொண்டிருந்தால் துஷ்பிரசாரமேயாகும். துஷ்பிரசாரம் என்பது பொய்மையே, சட்டப்படி குற்றமே. குற்றத்திற்கு இடமளிக்காமல் தண்டனை விதிக்கவே சட்டம். எனவே பிரசாரம் என்பதன் மூலம் பிற மதத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட மதத்தில் சேருமாறு அழைப்பு விடுவதை, மத மாற்றப் பிரசாரம் செய்வதை, அரசியல் நிர்ணயச் சட்டம் தண்டனைக்குரிய குற்றமாக்குதல் வேண்டும்.

மதச் சுதந்திரத்தின்படி பிரசாரவுரிமை அளிக்கப்பட்டுள்ளதே என இதற்கு ஆட்சேபணை செய்வது நிற்காது. ஏனெனில் மதப் பிரசாரம் என்பது அம்மதத்தின் கொள்கை முதலான மதாம்சங்களுக்கு விளக்கமாகவே மட்டும் முடிந்து, அதனாலேயே பிற மதத்தினரும் தானாகக் கவரப்பட்டு அதைத் தழுவுவதற்குத் தான் மதச் சுதந்திரம் இடமளிக்குமே ஒழிய, தமது கொள்கைகளை விளக்கி அதனால் பிறரை அம்மதத்திற்கு வருமாறு அழைப்பு விடுப்பதற்கல்ல.

# நீதிக் கதைகள்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## குருபக்தி

நாம் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றாலும் பெரியவர்கள் மூலம்தான் தெரிந்து கொள்கிறோம். குழந்தை தன் தாயார், தகப்பனார் யார் என்பதை தாயாரிடத்திலிருந்தோ, தகப்பனாரிடத்திலிருந்தோ, அல்லது பெரியவர்கள் மூலமாகவோ தெரிந்து கொள்ள முடியும். மாதா, பிதா, குரு ஆகிய இந்த மூன்று பேரும் நமக்கு பிரத்யக்ஷ தெய்வங்கள். மாதா பிதாக்கள் நம் சரீரத்தைக் காப்பாற்றுகிறார்கள். ரோகம் வந்தால் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் நம் தேகத்தைப் பொறுத்த மட்டும் ரக்ஷிப்பார்கள். ஆனால் இந்தத் தேகம் திரும்பியும் திரும்பியும் ஜன்மம் எடுக்கக் காரணமாகிறது.

சம்சாரமென்கிறது ஒரு பெரிய வியாதி. அதிலிருந்து தப்பிக்க, குருதான் உபகாரம் பண்ண முடியும். எக்காலத்திலும் வியாதியில்லாத நிலையைக் கொடுக்க, குரு ஒருவரால்தான் முடியும். அவர்தான் கரையேற்ற முடியும். இவ்வளவு உயர்ந்தவரான குருவுக்கு உபமானம் ஏதாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால் - ஒருவன் பணக்காரனாக இருந்தால், குபேரன் போல் பணக்காரன் என்கிறோம். அந்த மாதிரி குரு யாரைப்போல் இருக்கிறார் என்றால், அவருக்கு நிதர்சனம் யாரும் இல்லை. ஆனால் குருவின் சக்தி பரம்பரையாய் எல்லாச் சிஷ்யர்களுக்கும் வரக்கூடியது.



குருவினிடம் பக்தி பண்ணினால் வேண்டியதெல்லாம் கிடைக்கும். இதற்கு அநேக புராணக் கதைகள் உண்டு. ஓர் ஊரில் ஒரு குரு, சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒரு சிஷ்யன் மிகவும் மந்தபுத்தி உள்ளவன். மற்ற சிஷ்யர்கள் எல்லா வித்தைகளையும் கிரஹித்துக் கொண்டு மிகவும் மேதாவிகளாய் இருந்தார்கள். படிப்பை முடித்துக் கொண்டு குருவினிடம் அநுமதி பெற்றுக் கொண்டு

போய்விட்டார்கள். இந்தச் சிஷ்யன் மட்டும் சுச்ரூஷை பண்ணிக் கொண்டு குருவினிடமே இருந்தான். அவனுக்கு அநுக்ரஹ காலம் வரவில்லை. இந்தச் சமயத்தில் குருவுக்கு ஒரு பெரிய வியாதி வந்துவிட்டது. பகவான் ஸ்வப்னத்தில் தோன்றி, 'நீ காசி வாசம் பண்ணினால் உன் வியாதி ஸ்வஸ்தமாகும்' என்றார். இந்த மந்த புத்தியான சிஷ்யனுடன் ஐந்தாறு சிஷ்யர்கள் இருந்தார்கள். 'நீங்கள் என்னைக் காசிக்கு அழைத்துக் கொண்டு போகிறீர்களா?' என்று குரு கேட்டார். அவர்கள், 'எங்களால் முடியாது' என்றார்கள். அப்படித்தான் உலக ஸ்வபாவம். ஒருவனுக்கு பலமும் ஆரோக்கியமும் சம்பாத்தியமும் இருக்கும் வரைக்கும் பெண்டாட்டி, பிள்ளைகள், பந்துக்கள்கூட இருப்பார்கள். சம்பாத்தியம் இல்லாவிட்டால் ஒருவரும் லக்ஷ்யம் பண்ண மாட்டார்கள். ஆனால் மந்தபுத்தி, 'நான் வருகிறேன்'' என்றான். அவனை அழைத்துக் கொண்டு குரு காசிக்குப் போனார். அவர் வியாதியோ மிகவும் கஷ்டமான வியாதி. சிஷ்யன் சிரமப்பட்டு அவரைக் கங்கைக்கு அழைத்துப்போய், ஸ்நானம் பண்ணிவைத்து அவருக்காக பிக்ஷை வாங்கி அவருக்குப் போடுவான். இவ்வளவு செய்தும் குரு அவனைக் கோபித்துக் கொள்வார். சாப்பாடு நன்றாய் இல்லை என்பார். அப்படியும் தவறாமல் சிஷ்யன் குருவுக்குச் சுச்ரூஷை எல்லாம் பண்ணிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் சிஷ்யன் கங்கைக்குச் சந்தியா வந்தனத்துக்காகப் போனான். அப்பொழுது மகாவிஷ்ணு கருடாரூடராய் வந்து, சிஷ்யனைப் பார்த்து 'நீ இவ்வளவு தீவிரமாக குரு சுச்ரூஷை பண்ணுகிறாயே! ஒரு வரம் கேள். நான் தருகிறேன்'என்றார் சிஷ்யன் மகாவிஷ்ணுவைப் பார்த்து 'உங்களால் எனக்கு ஆக வேண்டிய காரியம் ஒன்றுமில்லை எனக்கு உங்களிடத்திலிருந்து ஒரு வரமும் வேண்டாம்' என்று சொன்னான். உடனே மகாவிஷ்ணு சிவனிடத்தில் போய் இதைச் சொன்னார். இரண்டு பேரும் சிஷ்யனிடம் வந்தார்கள். பரமசிவன் சிஷ்யனுக்கு வரம் தருகிறேன் என்றார். மகா விஷ்ணுவுக்குச் சொன்னபடியே சிஷ்யன் சிவனுக்கும் பதில் சொன்னான். பரமேசுவரன் நிர்ப்பந்தம் பண்ணினார். ஒரு தடவை, இரண்டு தடவை, பல தடவை சொல்லிப் பார்த்தார். அதன் பேரில், 'என் குருவைக் கேட்கிறேன். அவர் வரம் வாங்கிக்கொள் என்றால் அவருக்கு வியாதி ஸ்வஸ்தமாக வேண்டும் என்றுதான் கேட்பேன்' என்று சிஷ்யன் சொன்னான்.

பிறகு சிஷ்யன் குருவினிடம் போய் நடந்ததைச் சொன்னான். 'உனக்கு இஷ்டமிருந்தால் கேள்' என்று மகாவிஷ்ணு, பரமசிவன், குரு சொன்னார்.

உடனே மற்ற எல்லாத் தேவர்களும் வந்து குருவுக்கு வியாதி ஸ்வஸ்தமாக அநுக்ரஹம் பண்ணினார்கள். சிஷ்யனுக்கும் குரு பக்தியால் எல்லா வித்தையும் கிடைத்து விட்டது. இதிலிருந்து குரு பக்தி பண்ணினால் வித்தை சம்பத்து எல்லாம் கிடைக்கும் என்று தெரிகிறது.

பித்ருபக்திக்கு ஒரு கதையுண்டு. நசிகேதஸ் என்று ஒரு பையன். அவன் தகப்பனார் ஒரு யாகம் பண்ணினார். அந்த யாகத்தில் தனக்கு பிரியமான வஸ்துவைத் தானம் பண்ண வேண்டும். நசிகேதஸ் அப்பாவைப் பார்த்து, 'என்னை யாருக்குத் தானம் பண்ணப் போகிறீர்கள்?' என்று கேட்டான். ஒரு தரம் கேட்டான், இரண்டு தரம் கேட்டான். அப்பாவுக்குக் கோபம் வந்தது. 'உன்னை யமனுக்குத்தான் தானம் பண்ணப் போகிறேன்' என்றார். ஆனால் உடனே மிகவும் துக்கப்பட்டார். அப்பொழுது நசிகேதஸ் அப்பாவைச் சமாதானம் பண்ணினான், 'உங்கள் தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தா எங்கே போனார்களோ, நீங்களும் எங்கே போகப் போகிறீர்களோ, அங்கேதான் நானும் போகிறேன். அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்' என்று யமலோகம் போனான்.

நசிகேதஸ் யமலோகம் போனபொழுது யமன் அங்கே இல்லை. பிறகு வந்ததும், நசிகேதஸைப் பார்த்து, 'எப்போது வந்தாய்?' என்று கேட்டான். 'நான் வந்து மூன்று நாள் ஆயிற்று என்றான் நசி கேதஸ்'. மூன்று நாள் காத்துக் கொண்டிருந்ததற்காக யமன் நசிகேதஸ்ஸுக்கு மூன்று வரம் கொடுத்தான். முதல் வரத்தால், 'என் அப்பாவுக்குக் கோபம் தணிய வேண்டும்' என்று கேட்டான். பாக்கி இரண்டு வரம் ஆத்ம தத்துவத்தைப்பற்றிக் கேட்டான். யமன் முதலில் சொல்ல விரும்பவில்லை. அப்பொழுது நசிகேதஸ் 'சத்யம் என்பது எங்களுக்குத் தானா? உங்களுக்கு இல்லையா?' என்று கேட்டான். பிறகு யமன் நசிகேதஸ்தஸ்ஸுக்கு உபதேசம் பண்ணினான். வரத்தைப் பெற்றுக் கொண்டு மறுபடியும் தந்தையிடம் வந்தான். அவன் பிரம்மஞானியாய்த் திரும்பி வந்ததைப் பார்த்து, 'உன் பிராப்தி எனக்குக் கிடைக்கவில்லையே, என் அஞ்ஞானம் தொலையவில்லையே!' என்று அவன் தகப்பனார் வருத்தப்பட்டார். இந்தக் கதை, பித்ரு பக்தியின் விசேஷத்தைக் காட்டுகிறது.

மாத்ரு பக்தி எல்லாரும் காட்ட வேண்டும். பிறந்தது முதல் கடைசிவரைக்கும் மாதாதான் நம்மைக் காப்பாற்றுகிறாள். நமக்கெல்லாம் மாதா, பிதா, குரு இவர்கள் பிரத்யக்ஷ தெய்வங்கள். அவர்களுக்குக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டு எல்லோரும் க்ஷேமமாய் இருக்க வேண்டும்.

ஜெய ஜெய சங்கர... ஹர ஹர சங்கர...

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



மத்திய பிரதேசம் மற்றும் பல வட மாநிலங்களிலிருந்து மாணவர்கள் ஆதி சங்கரர் பற்றியும், அவரின் அத்வைத வேதாந்த தத்துவங்களைப் பற்றியும் அறிந்து கொள்ளும் பொருட்டு நாடு முழுவதும் பயணம் செய்து வருகிறார்கள். அந்தப் பயணத்தின் தொடர்ச்சியாக இன்று கைலாசநாதர் கோவில், காமாக்ஷி அம்மன் கோவில், ஏகாம்பரேஸ்வரர் கோவில், காஞ்சி மடம் தரிசனம் செய்து விட்டு ஓரிக்கை வந்து ஆச்சாரியாள் அவர்களை தரிசனம் செய்தார்கள். அவர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அருளிய ஆச்சாரியாள் கூறினார்கள்:

**சர்வ வேதாந்த சித்தாந்த கோசரம் தம கோசரம்**
**கோவிந்தம் பரமானந்தம் ஸத் குரும் ப்ரணதோஸ்ம்யஹம்**
**நாராயணம் பத்மபுவம் வஸிஷ்டம் சக்திம் ச தத்புத்ர பராசரம் ச।**
**வ்யாசம் சுகம் கௌடபதம் மகாந்தம்**
**கோவிந்த யோகீந்த்ரம் அதாஸ்ய சிஷ்யம்।**
**ஸ்ரீ சங்கரா சார்யம் அதாஸ்ய பத்மபாதம் ச ஹஸ்தாமலகம் ச சிஷ்யம்।**
**தம் தோடகம் வார்த்திககாரம் அன்யான் ஆஸ்மத் குரூன் ஸந்ததம் ஆனதோஸ்மி**
**ஸ்ருதி ஸ்மிருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத் பாத சங்கரம் லோக சங்கரம்**
**அபார கருணா சிந்தும் ஞானதம் சாந்தரூபினம்**
**ஸ்ரீ சந்த்ரசேகர குரும் ப்ரணமாமி முதாந்வஹம்**

देवे देहे च देशे च भक्त्यारोग्यसुखप्रदम् ।
बुधपामरसेव्यं तं श्रीजयेन्द्रं नमाम्यहम् ॥

**தேவே தேஹே ச தேஶ ச பக்த்யாரோக்யஸுகப்ரதம் ।**

**புதபாமரஸேவ்யம் தம் ஸ்ரீ ஜயேந்த்ரம் நமாம்யஹம் ।।**

**ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் ।**

**அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ।।**

நீங்கள் அனைவரும் புண்ணியவான்கள், இன்று நீங்கள் அனைவரும் புண்ணிய இடமான காஞ்சி தீர்த்த ஸ்தானங்கள் தரிசனம் செய்ய மத்திய பிரதேஷ் அரசு மூலம் வந்துள்ளீர்கள். இது ஒரு நல்ல விஷயம். **नती & उन्नति** நதி மற்றும் உன்னதி - நதி - பகவானுக்கு நமஸ்காரம் செய்து, பெரியவர்களுக்கு நமஸ்காரம் செய்து, உத்தமமான ஸ்தானம் அடைய பிரயர்த்தனம் செய்கிறீர்கள். நமது வளர்ச்சி பக்தி வழியாக ஏற்படுகிறது. **उन्नति –** வளர்ச்சி இரண்டு வழியில் ஏற்படுகிறது. பௌதீக வளர்ச்சி - வீடு கட்டுதல், கார் வாங்குதல், ஆரோக்கியமாக இருத்தல், வியாபாரம் வளர்ச்சிக்கு வழி. பௌதிக வழியில் வளர்ச்சி. மின்சாரம் இல்லாமல் இருந்தது, எண்ணை இல்லாமல் இருந்தது. பேசக் கூட வழி இல்லை. கடிதம் எழுத வேண்டியிருந்தது. ஆனால், இப்பொழுது அனைத்தும் மாறிவிட்டது. இப்பொழுது உலகத்தில் இருக்கும் அனைவரிடமும் பேச முடியும்.

இன்னொன்று ஆத்யாத்மிக வளர்ச்சி. மனிதர்களுக்கு மனம் உள்ளது. மனதில் வளர்ச்சி உள்ளது. ஆத்யாத்மிக வளர்ச்சி உண்டு. மனதில் ஸ்ரத்தா, சங்கல்பம், சுத்தமான அன்பு, தயா, நட்பு, மனிதாபிமானம், நல்லவர்களாக - **रमणीयम् प्रसन्न अम्बु सन् मनुष्य मनो यथा** - ஏரியில் உள்ள நீர் சுத்தமாக, ஸ்படிகமாக உள்ளது. நிர்மல் என்று எதைக் கூறுகிறோம். - **सन् मनुष्य मनो यथा** - கள்ளமற்ற, கபடமற்ற, உள்ளம். அகங்காரம் இல்லாத, த்வேஷம் இல்லாத, ஆடம்பரம் இல்லாத - இந்த குணங்களே பாரதத்தின் தன்மை.

இந்தத் தன்மையால், சாத்விக் தன்மையால் நாம் சக்தியற்றவர்கள் என்று அர்த்தமல்ல. ஒன்றும் அறியாதவர்கள் என்று கிடையாது. கம்பீரம் இல்லாதவர்கள், வீரர்கள் அல்ல என்று அர்த்தம் கிடையாது. அமைதியாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு துன்பம் தரக்கூடாது. நம்மை தூக்ஷித்தாலும், அவமானப்படுத்தினாலும் நாம் சமாதானமாக உள்ளோம். பாரதத்தின் தத்துவம், பாரதத்தின் குறிக்கோள் சனாதனத்தின் குறிக்கோள் - உத்தமமான, சாஸ்வதமான சத்தியமான பரமாத்மாவை அடைவதே மனிதனின்

குறிக்கோள். உண்ணுதல், ஆடை அணிந்து கொள்ளுதல் வியாபார ரீதியாக அதற்கு அவசியம். ஞானம் அடையாத வரையில் இந்த சம்சார வாழ்வில் -

**புனரபி ஜனனம் புனரபி மரணம் புனரபி ஜனனி ஜடரே ச'யனம் ।**
**இஹ ஸம்ஸாரே பஹு துஸ்தாரே க்ருபயாபாரே பாஹி முராரே ।।**

இதை ஆதி சங்கராச்சாரியார் கூறியுள்ளார். இதில் விவகார வழியிலும் நல்ல திசை உள்ளது. மாயா என்பது விஸ்வம், உலகம். இதிலே நாம் ஒரு மாயாவை ஏற்படுத்தி உள்ளோம். ஏற்கனவே ஒரு மாயா உள்ளது. இதன் நடுவில், நமது அகங்காரம் காரணமாக, நமது அதிக ஆசை காரணமாக - இது தேவை, அது தேவை இது வேண்டாம், அது வேண்டாம் - இதற்கு ச்வார்த்த என்று பெயர். இதனால் நாம் ஒரு மாயாவை ஏற்படுத்தி உள்ளோம். இந்த மாயாவிலிருந்து நாம் விடுபட வேண்டும். மாயாவால் நாம் கட்டுப்படுத்தப்படுகிறோம். இதிலிருந்து நமக்கு முக்தி, விடுதலை வேண்டும். இந்த சம்சார பந்தத்தில் இருந்து விடுதலை பெறவே, ஆச்சாரியார் சங்கராச்சாரியார் வேதாந்த தர்சனம் பிரச்சாரம் செய்தார்கள். இப்பொழுது இருக்கும் உலகில் நல்லவனாக இருக்க செயல்பட வேண்டும்.

**த்வயி மயி ச அன்யத்ர ஏகோ விஷ்ணு: வ்யர்த்தம் குப்யஸி மயி அஸஹி விஷ்ணு:**
**ஸர்வஸ்மின்னபி பஸ்யாத்மானம் ஸர்வத்ரோத் ஸ்றுஜ பேதாஜ்ஞானம்**

**त्वयि मयि च अन्यत्र एको विष्णु : व्यर्थम् कुप्यसि मयि असहिष्णु:**
**सर्वस्मिन्नपि पश्यात्मानं सर्वत्रोत्सृज भेदाज्ञानम्**

இது வேறு, இது வேறு என்று ஆத்ம தர்சனம் செய்ய வேண்டும். அனைத்தும் ஒன்றே. **த்வயி மயி ச அன்யத்ர ஏகோ விஷ்ணு:** இதிலும் அதிலும் பரமாத்மா விஷ்ணு. எங்கும் நிறைந்து இருப்பவர் விஷ்ணு எனப்படுகிறார். அந்த சர்வ ஆத்ம தர்சனதிற்கு ஆதி சங்கரர் பணி செய்தார்.

ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

## सदासिव ब्रह्मेन्द्र कीर्थ्नाः

प्रति वारम् वारम् मानस भज रे रघु वीरम् (भज)

कालाम्बोधर कान्त शरीरम् कौशिकशुक सौनक परिवारम् (भज)

कौसल्या दशरथसुकुमारम् कलिकल्मषभयगहनकुटारम् (भज)

परमहम्सहृुथ्पद्म विहारम् प्रतिहतदशमुखफ्फलविस्तारम् (भज)

## ப்ரதி வாரம் வாரம் மானஸ பஜரே ரகுவீரம்

ப்ரதி வாரம் வாரம் மானஸ பஜ ரே ரகுவீரம்

காலாம்போதர காந்த ஸரீரம் கௌசிகசுகசௌனக பரிவாரம் (பஜ)

கௌசல்யாதசரதஸுகுமாரம் கலிகல்மஷபயகஹனகுடாரம் (பஜ)

பரம ஹம்ஸஹ்ருத்பத்ம விஹாரம் ப்ரதிஹததசமுகபல விஸ்தாரம் (பஜ)

*பொருள்: அடிக்கடி ரகுவீரனான ராமனை பஜிப்பாய் ஹே மனமே!*

*காளமேகத்தைப்போல் விரும்பத்தக்க மேனியை உடையவனும் கௌசிகர் சுகர் சௌனகர் முதலியவர்களால் சூழப்பட்டவனுமான ரகுவீரனை (பஜ)*

*கோசலைக்கும், தசரதருக்கும் வாய்த்த நல்குமாரனும் கலிகால பாபங்களைக் கொண்ட அச்சம் என்னும் காட்டை அழிக்கும் கோடாரி போன்றவனுமான (பஜ)*

*ரகுவீரனை பரமஹம்ஸர்களின் இதயங்களாகிய தாமரைகளில் விளையாடுகின்றவனும், தசமுக ராவணனுடைய பெரும் சேனையை அழித்தவனுமான (பஜ) ரகுவீரனை வணங்குகிறேன்.*

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி

**ஜுலை** 25 - பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் சாதுர்மாஸ்ய வ்ரத சங்கல்பம் இன்று காஞ்சிபுரம் அடுத்துள்ள ஓரிக்கை என்னுமிடத்தில் மேற்கொண்டார்கள்.

**ஜுலை** 31 - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் அவர்தம் பொற்கரங்களால் ஸ்ரீ ஆதி சங்கராசார்ய ஸ்தோத்திர புத்தக தெலுங்கு பதிப்பை வெளியிட்டு அனுக்ரஹித்தார்கள்.

**ஆகஸ்ட்** 1 - இன்று வைதீர்கர்களின் சமஷ்டி பிக்ஷாவந்தன நிகழ்வினை ஒட்டி பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அனுக்ரஹ பாஷணம் வழங்கி அருளினார்கள். வைதீக பிக்ஷாவந்தனம் மற்றும் பாத பூஜை ஆண்டுதோறும் சாதுர்மாஸ்ய சமயத்தில் நடைபெற்று வருவதாகும்.

மாலை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ப்ரதோஷ பூஜை ஓரிக்கை ஸ்ரீ மடம் முகாமில் நடத்தி அருளினார்கள்.

**ஆகஸ்ட்** 2 - இன்று ஆடிபெருக்கு விழா.

தென்னிந்திய கலாசாரத்தின்படி, ஒருவர் காவேரி நதிக்கரையில் வசிக்காவிட்டாலும், அவர் அருகில் உள்ள குளம், குட்டை, ஏரி மற்றும் கோவில் திருக்குளம் போன்ற இடங்களுக்கு சென்று அதில் நதியை நினைவு கூர்நது பூஜைகள் செய்வர். காவேரி அஷ்டோத்திரம் அல்லது லக்ஷ்மி அஷ்டோத்திரம் மூலம் அர்ச்சனை செய்து, உபசார பூஜைகள் செய்தும் தூபதீப நைவேத்தியங்கள் சமர்ப்பித்து தீபாராதனைகளும் செய்வார்கள்.

மேற்கண்ட நியமப்படி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பண்டிதர்கள் ஆண்டு தோறும் ஸ்ரீ மடம் முகாமில் காவேரி பூஜை நடத்தி வருகிறார்கள்.

இன்று அதிகாலை பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளாசியோடு அவர்தம் முன்னிலையில் பக்தர்கள் புடைசூழ பண்டிதர்கள் ஓரிக்கை பூஜ்ய ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் மணி மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள பாலாறு நதிக்கு சென்று காவேரி பூஜை செய்தார்கள். தொடர்ந்து கலசத்தில் நதிநீர் நிரப்பி ஸ்ரீ மடம் முகாமிற்கு ஊர்வலமாக எடுத்து வந்து பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளிடம் சமர்ப்பித்தார்கள்.

பின்னர் நைவேத்ய பிரசாதங்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. காவேரி என்ற பெயரில் ‘கா’ என்பது பாபங்களை துடைப்பதாகவும் ‘வி’ என்பது நம் எண்ணங்களை பூர்த்தி செய்வதாகவும், ‘ரி’ என்பது மறுபிறப்பிலிருந்து விடுபடவுமானதாகும். இதுவே காவிரியின் தனிச்சிறப்பாகும்.

இன்று ரிக்வேத ஸம்ஹிதா ஹோமமும் ஓரிக்கை முகாமில் நடைபெற்றது.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் ஆக்ஞையின்படி கேரள மாநிலத்தில் சமீபத்தில் பெய்த அடை மழையின் காரணமாக உயிரிழந்தவர்களுக்காக காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன் திருக்கோவில் கோபுரத்தில் மோக்ஷ விளக்கு ஏற்றப்பட்டது.

**ஆகஸ்ட்** 4 - ஓரிக்கை முகாமில் இன்று சூரிய நமஸ்காரம் நடைபெற்றது.

**ஆகஸ்ட்** 5 - பிரம்மஸ்ரீ டாக்டர் ரங்கன் ஜி என்பவரால் ஸ்ரீமத் ராமாயண நவாஹ மஹோத்ஸவ நிகழ்ச்சி ஆறு நாட்களுக்கு தொடர்ந்து 10.8.2024 வரை நடைபெற்றது. தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அனுக்ரஹபாஷணமும் வழங்கி அருளினார்கள்.

**ஆகஸ்ட்** 8 - இன்று ரிக்வேத பாராயணமும், ரிக் ஸம்ஹிதா ஹோமமும் நடைபெற்றது.

**ஆகஸ்ட்** 9 - கேரள பந்ததி வ்ராத்பதி இஷ்டியும் முகாமில் நடைபெற்றது. தொடர்ந்து ரிக் ஸம்ஹிதா ஹோமம் ஓரிக்கையிலிருந்து நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

**ஆகஸ்ட்** 11 - உத்திரபிரதேச மாநிலம் நைமிசாரண்ய க்ஷேத்திரத்தில் மூன்று நாள் 9-08-2024 முதல் 11-08-2024 வரை வேத சம்மேளனம் உலக நன்மைக்காகவும், அமைதிக்காகவும் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கர விஜேயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஆக்ஞைப்படி நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டிலிருந்தும் மற்ற பகுதிகளிலிருந்தும் ரிக் வேதம், கிருஷ்ண யஜுர் வேதம், சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வண வேதம் ஆகியவற்றைச் சேர்ந்த வித்வான்கள பங்கு பெற்றார்கள்.

பங்களாதேசில் அமைதி நிலவ ஆசீர்வதித்தார்கள்.

முகாமில் இன்று சூர்ய நமஸ்காரமும் நடைபெற்றது.

**ஆகஸ்ட்** 12 - ஸ்ரீ சுப்ரமண்ய சமாஜ் திருக்கோவில் நிகழ்ச்சிக்காக பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

**ஆகஸ்ட்** 14 - வருடாந்திர பஞ்சாங்க சதஸ் ஓரிக்கை முகாமில் நடைபெற்றது.

**ஆகஸ்ட்** 15 - புதுடில்லி ஆர்.கே புரம் செக்டார், ஐயப்பாமந்திர் பகுதியில் உள்ள ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் 19.8.2024ல் நடைபெற்ற சண்டி ஹோமத்திற்கு ஆசி வழங்கியருளினார்கள்.

**ஆகஸ்ட்** 16 - ஜகத்குரு பிரசஸ்திஹி சமஸ்க்ருத காவ்யம் தெலுங்கு உபன்யாசம் அர்த்தத்துடன் கூடிய தூலிபுல ராமகிருஷ்ண சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்ட பிரதியை பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளால் வெளியிடப்பட்டது. ஜகத்குரு பிரசஸ்திஹி காவ்யம் பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் மேல் ஸ்ரீ ஜடாவல்லப புருஷோத்தம் என்பவரால் 1930ல் எழுதப்பட்டுள்ளது. இது 102 எளிய ஸம்ஸ்க்ருத சுலோகங்களை கொண்டது. ஸ்ரீ புருஷோத்தம் இந்த காவ்யத்தில் தனது உண்மையான பக்தியை குறிப்பிட்டத்துடன் சுவாமிகளை உயர்ந்த கடவுளல்லால் வேறில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**ஆகஸ்ட்** 17 - இன்று மாலை ஓரிக்கை முகாமில் ப்ரதோஷ பூஜை நடைபெற்றது.

**ஆகஸ்ட்** 18 - ஸ்ரீ காமாக்ஷி ஸ்ரீ வித்யா சமிதியினரால் மூக பஞ்சசதி பாராயணம் முகாமில் நடைபெற்றது.

**ஆகஸ்ட்** 19 - ரிக் வேதம் மற்றும் யஜூர் வேத உபாகர்மா ஸ்ரீ மடம் முகாமில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்யர்களின் அனுக்ரஹத்துடன் நடைபெற்றது. உபநயனம் முடிந்த பிறகு முதல் ஆவணி ஆவிட்ட தினத்திலிருந்து வேத மந்திரங்கள் கற்க துவங்குகின்றன. உத்சர்ஜன கர்மா தொடர்ந்து வருகிற தை மாதத்தில் வேதம் கற்பது நிறுத்தப்படுகிறது. அடுத்த ஆறு மாதங்களில் வேதங்களான சிக்ஷா, வியாகர்ணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம் மற்றும் கல்பசூத்ரம் கற்கப்படுகிறது. தொடர்ந்து வருகிற சிராவண மாதத்தில் உபாகர்மா தினத்தில் உபாகர்மா நடத்தி வேத மந்திரங்கள் மீண்டும் கற்க துவங்கப்படுகிறது. வேதம் படிக்க துவங்குகின்ற இந்த கர்மாவிற்கு தான் ''உபாகர்மா'' என்பதாகும். இந்த முறையில் உபாகர்மா செய்வோமானால் வேத மந்திரத்திற்கு சக்தி கிடைக்கப் பெருகிறது. தொடர்ந்து அடுத்த தலைமுறை இளைஞர்களுக்கு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் அருளினார்கள்.

அமெரிக்க நாட்டு குழுவினரின் 24ம் ஆண்டு இசை, நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்தோத்ரம்

பி. ஆர். கண்ணன்

**हरनेत्राग्निसंभूतः वाय्वग्निजाह्नवीभृतः।**
**कार्तिकेयः शरवणे सलीलः पातु नः सदा ।।**

**ஹரநேத்ராக்நிஸம்பூத: வாய்வக்நிஜாஹ்நவீப்ருத: ।**
**கார்த்திகேய: ஶரவணே ஸலீல: பாது ந: ஸதா ।। 1 ।।**

*சரவணப்பொய்கையில், ஆறு கிருத்திகை தேவிகள் சுப்ரமணியருக்கு ஸ்தன்ய பானம் கொடுத்து வளர்த்தனர். எனவே அவர் கார்த்திகேயர் என்று அழைக்கப்பட்டார். (1)*

**जातमात्रः कुमारस्तु पराशरसुतान्मुनीन् ।**
**मोचयित्वा पितुः शापात् षड्भ्यो ज्ञानं च दत्तवान् ।।**

**ஜாதமாத்ர: குமாரஸ்து பராஶரஸுதாந்முநீந் ।**
**மோசயித்வா பிது: ஶாபாத் ஷட்ப்யோ ஜ்ஞாநம் ச த்தவாந் ।।2**

*பிறந்த உடனேயே, ரிஷி பராசரரின் புத்ரர்களை - ஆறு முனி குமாரர்களை, அவர்களின் தந்தையின் சாபத்திலிருந்து குமாரர் விடுவித்தார். பின்னர் அவர்களுக்கு ஞானத்தையும் வழங்கினார். பராசரரின் ஆறு புத்ரர்களும் ஆற்றிலிருந்து மீன்களை எடுத்து, அவற்றை துடிக்கவிட்டு, பின்னர் ஆற்றில் மீண்டும் விடுவதைக்கண்ட பராசரர் அவர்களை மீன்களாக ஆகுமாறு சபித்தார். (2)*

**बन्दीचकार ब्रह्माणं साभिमानमशिक्षितम् ।**
**स्वामिनाथः कृपालुः सः पातु नः परितः सदा ।। ३ ।।**

**பந்தீசகார ப்ரஹ்மாணம் ஸாபிமாநமஶிக்ஷிதம் ।**
**ஸ்வாமிநாத: க்ருபாலு: ஸ: பாது ந: பரித: ஸதா ।। 3 ।।**

*வீண்பெருமையும் அறியாமையும் மிக்க பிரம்மாவைச் சிறையில் அடைத்த, கருணையுள்ள சுவாமிநாதர் நம்மை எல்லாப் பக்கங்களிலும் எப்போதும் காக்கட்டும்.*

*(3)*

**शिवस्कन्धसमारूढः ओंकारार्थोपदेशकः ।**
**सुब्रह्मण्यो महातेजाः पातु नः परितः सदा ॥ ४ ॥**

**ஶிவஸ்கந்தஸமாரூட: ஓம்காரார்த்தோபதேஶக: ।**
**ஸுப்ரஹ்மண்யோ மஹாதேஜா: பாது ந: பரித: ஸதா ॥ 4 ॥**

*சிவபெருமானின் தோள்மீது ஏறி, ஓங்காரப் பொருளை விளக்கிய ஒளிமயமான சுப்ரமணியர் எப்போதும் நம்மை எல்லா பக்கங்களிலும் காக்கட்டும். (4)*

**बालस्य लीलाव्याजेन विश्वरूपमदर्शयत् ।**
**अमरेभ्यः कुमारेशः पातु नः परितः सदा ॥ ५ ॥**

**பாலஸ்ய லீலாவ்யாஜேந விஶ்வரூபமதர்ஶயத் ।**
**அமரேப்ய: குமாரேஶ: பாது ந: பரித: ஸதா ॥ 5 ॥**

*குழந்தை விளையாட்டுபோல், தேவர்களுக்கு விஸ்வரூபத்தை காட்டிய குமாரன், எப்போதும் நம்மை எல்லா பக்கங்களிலும் காக்கட்டும். (5)*

**मुनियज्ञभवं छागं दुष्टं निरुन्ध्य योऽकरोत् ।**
**निजादिवाहनं पातु विशाखः परितः सदा ॥ ६ ॥**

**முநியஜ்ஞபவம் சாகம் துஷ்டம் நிருந்த்ய யோகரோத் ।**
**நிஜாதிவாஹநம் பாது விஶாக: பரித: ஸதா ॥ 6 ॥**

*முனிவரின் யக்ஞகுண்டத்தில் இருந்து எழுந்த துர்புத்தி கொண்ட ஆட்டினை அடக்கி, அதைத் தன் முதல் வாகனமாக ஆக்கிய விசாகன் நம்மை எல்லாப் பக்கங்களிலும் எப்போதும் காக்கட்டும். (6)*

**अम्बिकाशक्तिसंपन्नशक्त्यायुधधरो गुहः ।**
**मायासङ्ग्रामनिपुणः पातु नः परितः सदा ॥ ७ ॥**

**அம்பிகாஶக்திஸம்பந்நஶக்த்யாயுததரோ குஹ : ।**
**மாயாஸங்க்ராமநிபுண: பாது ந: பரித: ஸதா ॥ 7 ॥**

*அன்னை அம்பிகையின் சக்தியால் நிரப்பப்பட்ட 'சக்தி' வேல் என்ற ஆயுதத்தை ஏந்தியவனும், மாயை நிறைந்த போர்களை நடத்துவதில் வல்லவனுமான குஹன், எப்போதும் நம்மை எல்லாப் பக்கங்களிலும் காக்கட்டும். (7)*

**युद्धभूम्यां विश्वरूपं शूरपद्मासुराय च ।**
**प्रादर्शयन्महासेनः पातु नः परितः सदा ॥ ८ ॥**

**யுத்தபூம்யாம் விஶ்வரூபம் ஶூரபத்மாஸுராய ச ।**
**ப்ராதர்ஶயந்மஹாஸேந: பாது ந: பரித: ஸதா ॥ 8 ॥**

*போர்க்களத்தில் அசுரன் சூரபத்மனுக்கு விஸ்வ ரூபத்தை காட்டிய மகாசேனர் நம்மை எப்போதும் எல்லா பக்கங்களிலும் காக்கட்டும். (8)*

**रणभूम्यां शूरपद्मः मयूरकुक्कुटावभूत् ।**
**स्कन्दः कृपाकरस्ताभ्यां पातु नः परितः सदा ॥ ९ ॥**

**ரணபூம்யாம் ஶூரபத்ம: மயூரகுக்குடாவபூத் ।**
**ஸ்கந்த: க்ருபாகரஸ்தாப்யாம் பாது ந: பரித: ஸதா ॥ 9 ॥**

*மயிலாகவும், சேவலாகவும் மாறிய சூரபத்மனிடம் போர்க்களத்தில் கருணை காட்டிய ஸ்கந்தன் நம்மை எப்போதும் எல்லாப் பக்கங்களிலும் காக்கட்டும். (9)*

**मयूरो वाहनो जातः कुक्कुटश्चावभूत् ध्वजः ।**
**स्कन्दसेवापरौ आस्तां सेनानी पातु नः सदा ॥ १०**

**மயூரோ வாஹநோ ஜாத: குக்குடஶ்சாவபூத் த்வஜ: ।**
**ஸ்கந்தஸேவாபரௌ ஆஸ்தாம் ஸேநானி பாது ந: ஸதா ॥10॥**

*மயிலை வாகனமாகவும், சேவலை கொடியாகவும் மாற்றி, அவைகள் ஸ்கந்தனுக்கு விசேஷ ஸேவை செய்யும் வாய்ப்பை அளித்த ஸேனானி நம்மை எப்போதும் காக்கட்டும். (10)*

**गुहभक्तिरतौ जातौ विष्णोरमिततेजसः ।**
**पुत्र्यौ द्वे तापसौ भूतौ पातां नः परितः सदा ॥ ११ ॥**

**குஹபக்திரதௌ ஜாதௌ விஷ்ணோரமிததேஜஸ: ।**
**புத்ர்யௌ த்வே தாபஸௌ பூதௌ பாதாம் ந: பரித: ஸதா ॥ 11 ॥**

*எல்லையில்லா தேஜஸ் கொண்ட விஷ்ணுவிடமிருந்து பிறந்து, குஹனின் பக்தியில் மூழ்கி, தவங்களைச் செய்த இரண்டு புத்ரிகள், எல்லாப் பக்கங்களிலும் நம்மை எப்போதும் காக்கட்டும். (11)*

**उपयेमे गुहः पश्चात् ते इन्द्रव्याधपालिते ।**
**ते देवसेनावल्लीश्च पातां नः परितः सदा ॥ १२ ॥**

**உபயேமே குஹ: பஶ்சாத் தே இந்த்ரவ்யாதபாலிதே ।**
**தே தேவஸேநாவல்லீஶ்ச பாதாம் ந: பரித: ஸதா ॥ 12 ॥**

*பிற்காலத்தில் இந்திரனாலும், வேடனாலும் வளர்க்கப்பட்டு, குஹனை மணந்த அந்த தேவஸேனா, வள்ளி என்கிற தேவிகள் நம்மை எல்லாப் பக்கங்களிலும் எப்போதும் காக்கட்டும். (12)*

**वल्ली च इच्छाशक्तिः स्यात् देवसेना क्रियात्मिका ।**
**शक्त्यायुधो ज्ञानशक्तिः पान्तु नः शक्तयः सदा ॥ १३ ॥**

**வல்லீ ச இச்சாஶக்தி: ஸ்யாத் தேவஸேநா க்ரியாத்மிகா ।**
**ஶக்த்யாயுதோ ஜ்ஞாநஶக்தி: பாந்து ந: ஶக்தய: ஸதா ॥ 13 ॥**

*இச்சாசக்தியாகிய வள்ளி, க்ரியா சக்தியாகிய தேவஸேனா, ஞானசக்தி ரூபமாகிய 'சக்தி' வேல் என்கிற ஆயுதம் ஆகிய மூன்று சக்திகளும் நம்மை எப்போதும் காக்கட்டும். (13)*

**क्षेत्रषट्के विराजतः गुहः स करुणामयः ।**
**देव्युभाभ्यां सेव्यमानः पातु नः परितः सदा ।। १४ ।।**

**க்ஷேத்ரஷட்கே விராஜத: குஹ: ஸ கருணாமய: ।**
**தேவ்யுபாப்யாம் ஸேவ்யமாந: பாது ந: பரித: ஸதா ।। 14 ।।**

*ஆறுபடைவீடுகள் என்கிற க்ஷேத்ரங்களில் ப்ரகாசிப்பவரும், கருணை வடிவானவரும், இரு தேவிகளாலும் ஸேவிக்கப்படுபவருமான குஹன், நம்மை எப்போதும் எல்லாப் பக்கங்களிலும் காக்கட்டும். (14)*

**गुहप्रसादात् श्रीगुरोश्च गुहस्तोत्रमिदं कृतम् ।**
**भक्त्या स्मृतं च पठितं सर्वमंगलकारकम् ।। १५ ।।**

**குஹப்ரஸாதாத் ஸ்ரீகுரோஶ்ச குஹஸ்தோத்ரமிதம் க்ருதம் ।**
**பக்த்யா ஸ்ம்ருதம் ச படிதம் ஸர்வமங்கலகாரகம் ।। 15 ।।**

*குஹன், ஸ்ரீகுரு ஆகியோரின் அருளால் எழுதப்பட்ட இந்த குஹஸ்தோத்திரம், அதைப் பக்தியுடன் படித்து தியானிப்பவருக்கு எல்லா மங்களங்களையும் அளிக்கட்டும். (15)*

சுபம்



# புரட்டாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *17-09-2024* | செவ்வாய் | பௌர்ணமி பூஜை |
| *18-09-2024* | புதன் | விஸ்வரூப யாத்ரா |
| *21-09-2024* | சனி | மஹாபரணி |
| *28-09-2024* | சனி | ஏகாதசி |
| *29-09-2024* | ஞாயிறு | த்வாதசி |
| *30-09-2024* | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| *02-10-2024* | புதன் | மஹாளய அமாவாசை |
| *03-10-2024* | வியாழன் | நவராத்ரி ஆரம்பம் |
| *05-10-2024* | சனி | ஸ்வாதி - வேத பாராயணம் |
| *07-10-2024* | திங்கள் | அனுஷம் தேர் - அனுஷம் - வேத பாராயணம் |
| *09-10-2024* | புதன் | மூலம் தேர் - மூலம் - வேத பாராயணம் |
| *11-10-2024* | வெள்ளி | உத்ராடம் தேர் - உத்ராடம் - வேத பாராயணம் |
| *12-10-2024* | சனி | ஸரஸ்வதி பூஜை |
| *13-10-2024* | ஞாயிறு | அவிட்டம் தேர் - அவிட்டம் - வேத பாராயணம்<br>விஜய தஸமி ; ஏகாதசி |
| *14-10-2024* | திங்கள் | த்வாதசி |
| *15-10-2024* | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| *16-10-2024* | புதன் | பௌர்ணமி பூஜை |

***20-09-2024; 27-09-2024; 04-10-2024; 11-10-2024***

**வெள்ளிக்கிழமை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை**

# நாம ராமாயணம்

இந்த நாம ராமாயணம் 108 வாக்யங்களைக் கொண்டது. ராமாயணம் முழுவதையும் அழகாகக் கோர்த்து எழுதப்பட்டுள்ளது. துளஸீதாஸரால் எழுதப்பட்டது. அனைவரும் பாராயணம் செய்வது நலம். குழந்தைகளுக்கு ஓதுவித்தல் அதனினும் நலம். தினம் எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களால் பாடப்பட்ட இந்த ஸங்கீர்த்தனத்தை கேட்டல் நலம். ஒவ்வொரு வாக்யத்திற்கும் பின் நான் சரணடைகிறேன் என்று சேர்த்து கொள்ளவும்.

## उत्तर काण्डम्

**आगत मुनिगण सम्स्तुत राम्**
**विश्रुत दशकण्दोत्भव राम्**
**सीतालिन्गन निर्व्रुत राम्**
**नीति सुरक्षित जनपद राम्**
**विपिन त्याजित जनकज राम्**
**कारित लवणासुर वद राम्**
**स्वर्गत शम्बुक सम्स्तुत राम्**
**स्वतनय कुशलव नन्दित राम्**
**अश्वमेध् क्रतु दीक्षित राम्**
**कालावेदित सुरपद राम्**

**अयोध्याकजन मुक्तिद राम्**
**विधिमुक विभुदानन्दक राम्**
**तेजोमय निज रूपक राम्**
**सम्स्त्रुति बन्द विमोचक राम्**
**धर्म स्थापन तत्पर राम्**
**भक्ति परायण मुक्तिद राम्**
**सर्व चराचर पालक राम्**
**सर्व भवामय वारक राम्**
**वैकुण्दालय सम्स्थित राम्**
**नित्यानन्द पदस्थित राम्**

**राम राम जय राजा राम् राम राम जय सीता राम्**

# உத்தர காண்டம்

**ஆகத முனிகண ஸம்ஸ்துத ராம்**
*வந்திருந்த முனிகணத்தால் துதிக்கப்பட்ட ராமனை*

**விஸ்ருத தசகண்டோத்பவ ராம்**
*ராவண ஜனனம் முதலியவைகளைக் கேட்ட ராமனை*

**ஸீதாலிங்கன நிர்வ்ருத ராம்**
*ஸீதையின் அன்பு பிணைப்பால் மகிழந்த ராமனை*

**நீதி ஸுரக்ஷித ஜன பத ராம்**
*மக்களுக்கு நீதியை நிலை நாட்டிய ராமனை*

**விபின த்யாஜித ஜனகஜ ராம்**
*ஜானகியை காட்டில் விட்ட ராமனை*

**காரித லவணாஸுர வத ராம்**
*லவணாஸுரனை வதம் செய்த ராமனை*

**ஸ்வர்கத ஸம்புக ஸம்ஸ்துத ராம்**
*ஸ்வர்கம் ஏறின சம்புகனால் துதிக்கப்பட்ட ராமனை*

**ஸ்வதனய குசலவ நந்தித ராம்**
*தன்னுடைய புத்திரர்களாக குசலவர்களால் மகிழந்த ராமனை*

**அஸ்வமேத க்ரது தீக்ஷித ராம்**
*அஸ்வமேதத்திற்காக தீக்ஷையில் இருந்த ராமனை*

**காலாவேதித ஸுர பத ராம்**
*காலனால் க்யாபகம் செய்யப்பட்ட ராமனை*

**அயோத்யாகஜன முக்தித ராம்**
*அயோத்தி ஜனங்களுக்கு முக்தியை தந்த ராமனை*

**விதிமுக விபுதானந்த ராம்**
*பிரம்மாவால் ஆனந்தப்படுத்தப்பட்ட ராமனை*

**தேஜோமய நிஜ ரூபக ராம்**
*ஒளி பொருந்திய தன்னுடைய ரூபத்தை உடைய ராமனை*

**தர்மஸ்தாபன தத்பர ராம்**
*அறத்தை ஸ்தாபித்த தத்பரமான ராமனை*

**பக்தி பராயண முக்தித ராம்**
*பக்தியில் தோய்ந்தவர்களுக்கு முக்தி அளிக்கும் ராமனை*

**ஸர்வ சராசர பாலக ராம்**
*சராசரங்கள் அனைத்தையும் காக்கும் ராமனை*

**ஸர்வ பவாமய வராக ராம்**
*பிறப்பு என்னும் வியாதியை தடுக்கும் ராமனை*

**வைகுண்டாலய ஸம்ஸ்திதி ராம்**
*வைகுண்டத்தில் இருக்கும் ராமனை*

**நித்யானந்த பத ஸ்திதி ராம்**
*எப்போதும் ஆனந்த நிலையில் உள்ள ராமனை*

**ராம ராம ஜய ராஜா ராம் ராம ராம ஜய ஸீதா ராம்**

# பித்ரு ஸ்துதி ப்ருஹத் தர்மபுராணம்

**பித்ருக்களை ஆராதிக்க ஒவ்வொரு அமாவாசையிலும் மஹாளய பக்ஷத்திலும் இதைப் படிப்பது உத்தமம்.**

**நம: பித்ரே ஜன்மதாத்ரே ஸர்வ தேவ மயாய ச**

**ஸுகதாய ப்ரஸன்னாய ஸுப்ரீதாய மஹாத்மனே ॥ 1 ॥**

ஜன்மத்தை அளிப்பவரும், எல்லா தேவ வடிவானவரும், ஸுகத்தைக் கொடுப்பவரும், ப்ரஸன்னமானவரும், ப்ரீதியை உடையவரும், பெரியவருமான பித்ரு தேவருக்கு நமஸ்காரம்.

**ஸர்வ யக்யஸ்வரூபாய ஸ்வர்காய பரமேஷ்டினே**

**ஸர்வதீர்தாவலோகாய கருணா ஸாகராய ச ॥ 2 ॥**

அனைத்து வேள்வி வடிவானவரும், ஸ்வர்கமானவருக்கும், பரமேஷ்டியானவருக்கும், எல்லா தீர்த்தனங்களையும் கண்டவருக்கும், கருணக்கடலானவருக்கும் நமஸ்காரம்.

**நமஸ்சதா ஆஸுதோஷாய ஶிவரூபாய தே நம:**

**ஸாதா அபராத க்ஷமிணே ஸுகாய ஸுகதாய ச ॥ 3 ॥**

எப்போதும் விரைவில் மகிழ்பவரும், சிவ வடிவானவருக்கு நமஸ்காரம். எப்போதும் பிழைகளைப் பொறுப்பவரும் ஸுக வடிவானவருக்கும் ஸுகத்தை அளிப்பவருமான உமக்கு நமஸ்காரம்.

**துர்லபம் மானுஷமிதம் யேன லப்தம் மயா வபு:**

**ஸம்பாவனீயம் தர்மார்த்தே தஸ்மை பித்ரே நமோ நம: ॥ 4 ॥**

கிடைத்தற்கரிய பொருளையும், பெறுதற் பொருட்டு அமைந்ததுமான இந்த மனித உடலை எவர் மூலமாக அடைந்தேனோ அத்தகைய பித்ரு தேவருக்கு நமஸ்காரம் உமக்கு நமஸ்காரம்.

**தீர்த்த ஸ்னான தபோ ஹோம ஜபாதி யஸ்ய தர்சனம்**

**மஹாகுறோச்ச குரவே தஸ்மை பித்ரே நமோ நம: ॥ 5 ॥**

*எவருடைய தர்சனம், தீர்த்தம், ஸ்னானம், ஜபம். ஹோமம், தவம் இவைகளின் பலனாக அமையுமோ அத்தகைய மகா குருவுக்கும் குருவான பித்ரு தேவருக்கு நமஸ்காரம்.*

**யஸ்ய ப்ரணாம ஸ்தவனாத் கோடிச: பித்ருதர்பணம்**

**அஸ்வமேத ஸதைஸ்துல்யம் தஸ்மை பித்ரே நமோ நம: ॥ 6 ॥**

*எவருடைய நமஸ்காரமும், ஸ்தோத்ரமும் கோடி முறை பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்ததற்கும், நூறு அஸ்வ மேதங்களைச் செய்ததற்கும் ஈடாகுமோ அத்தகைய பித்ரு தேவருக்கு நமஸ்காரம்.*

**பல ஸ்ருதி**

**இதம் ஸ்தோத்ரம் பிது:புண்யம் ய:படேத் ப்ரயதோ நர:**

**ப்ரத்யஹம் ப்ராதருத்தாய பித்ருஸ்ராத்ததினேபி ச**

**ஸ்வஜன்மதிவஸே ஸாக்ஷத்பிதுரக்ரே ஸ்திதோபி வா**

**ந தஸ்ய துர்லபம் கிஞ்சித் ஸர்வக்தாதிவாஞ்சிதம் ॥ 7 ॥**

*புண்யமான ஐந்து பித்ரு ஸ்தோத்ரத்தை எவன் முயற்சியோடு காலையில் தினம் எழுந்தும், பித்ரு ஸ்ராத்தத்திலும், தன் பிறந்த நாளிலும், பித்ருவின் முன்னின்றும் படிக்கிறானோ அவனுக்கு ஸர்வக்யத்வம் முதலியவற்றில் அடையக்கூடாதது ஒன்றுமில்லை.*

**நானாபகர்ம க்ருத்வாபி ய: ஸ்தௌதி பிதரம் ஸுத:**

**ஸ த்ருவம் ப்ரவிதாயைவ ப்ராயச்சித்தம் ஸுகீ பவேத்**

**பித்ருப்ரீதிகரோ நித்யம் ஸர்வகர்மாண்யதார்ஹதி ॥ 8 ॥**

*ஒருவன் பல தீச்செயல்களைச் செய்தாலும், பித்ருதேவரை ஸ்தோத்ரம் செய்தால் அவன் ப்ராயச்சித்தம் செய்து ஸுகமடையலாம். பித்ருக்களுக்கு ப்ரீதியை செய்த அவன் எல்லா கர்மாக்களுக்கும் தகுதியுடையவனாகிறான்.*

# சாணக்ய ஸுபாஷிதம்

### வெட்கம் வேண்டாம்

**தன ஹான்ய ப்ரயோகேஷு வித்யா ஸங்க்ரஹணே ததா ।**
**ஆஹாரே வ்யவஹாரே ச த்யக்தலஜ்ஜ: ஸுகீ பவேத ॥**

*தனம், தாயம், கல்வி, உணவு, வ்யவஹாரம் இவைகளில் வெட்கத்தை விட்டு அவைகளைக் கைக்கொள்பவன் சுகமாயிருப்பான்.*

### த்விஜன்

**ஏகாஹாரேன ஸந்துஷ்ட: ஷட்கரம நிரத: ததா**
**க்ருதுகாஆபிகாமீ ச ஸ விப்ரோ த்விஜ உச்யதே ॥**

*ஒரே முறை உணவால் த்ருப்தியாயிருப்பவன், அறு தொழிலை செவ்வனே செய்பவன், ருது காலத்தில் மனைவியைச் சேர்பவன் உண்மையான த்விஜன். (வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், ஓதுதல், ஓதுவித்தல், தானம் தருதல், தானம் வாங்குதல் அறு தொழிலாகும்.)*

### சேர்த்தல்

**ஸத்குலே யோஜயேத் கன்யாம் புத்ரம் வித்யாஸு யோஜயேத்**
**வ்யஸனே யோஜயேத் சத்ரும் மித்ரம் தர்மேண யோஜயேத் ॥**

*பெண்ணை நல்ல குலத்தில் கொடுக்கவும், புத்ரனை கல்வியில் சேர்க்கவும், துக்கத்தில் சத்ருவை சேர்க்கவும், நண்பனை தர்மத்தில் சேர்க்கவும்.*

### ஆரம்பம்

**புத்ராச்ச விவிதை: சீலைர்னியோஜ்யா: ஸததம் புதை:**
**நீதிக்யா: சீலஸம்பன்னா பவந்தி குலபூஜிதா: ॥**

*புத்ரர்களை சீலத்திலும், பண்பாட்டிலும், கற்க விடுகிறார்களோ, அந்த நீதிமான்களை குலம் தொழும்.*

**மிகை நாடு**

**வ்யாலாஸ்ரயாபி விபலாபி ஸகண்டகாபி வக்ராபி பங்கில பவாபி தூரஸதாபி**

**கந்தேன பந்துரஸி கேதகீ ஸர்வஜந்தோ: எகோ குண; கலு நிஹன்தி ஸாமஸ்த தோஷான் ।।**

*ஹே தாழம்பூவே ! உன்னிடத்தில் பாம்பிருக்கும், பழம் கிடையாது. உடலெங்கும் முட்கள், வக்ரமான உடல், சேற்றில் இருப்பு, அடைதலோ அபாயமானது. இருப்பினும் உன் வாஸனை என்னும் குணம் இந்த தோஷங்களை முறியடிக்கிறதே.*

**வழிபடுத்தல்**

**அனுலோமேன பலினம் ப்ரதிலோமேன துர்பலம்**
**ஆத்மதுல்ய பலம் சத்ரும் வினயேன பலேன வா ।।**

*பலசாலியை வணங்கியும், துர்பலனை எதிர்த்தும், தனக்கு இணையான சத்ருவை வினயத்தாலோ, பலத்தாலோ வழிபடுத்துக.*

**அடக்கு**

**ஹஸ்தீ த்வங்குசமாத்ரேண வாஜீ ஹஸ்தேன க்ருஹ்யதே**
**ஸ்ருங்கீ லகுடஹஸ்தேன கட்க ஹஸ்தேன துர்ஜன: ।।**

*யானை அங்குஸத்தாலும், குதிரை கரத்தாலும், பசு தடியினாலும், வாளினால் துர்ஜனனும் அடங்குவான்.*

**விலகு**

**சகடம் பஞ்ச ஹஸ்தேன தஸ ஹஸ்தேன வாஜினம்**
**கஜம் ஹஸ்த சஹஸ்ரேண தேசத்யாகேன துர்ஜனம் ।।**

*ஐந்து முழம் வண்டியிலிருந்தும், பத்து முழம் குதிரையிடமிருந்தும், ஆயிரம் முழம் யானையிடமிருந்தும், துர்ஜனனிடமிருந்து தேஸத்தை விட்டே விலகவும்.*

*(தொடரும்)*

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் ச்ரத்தாதாத்பர்யமஹத்த்வவிதே வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ச்ரத்தாவான் தத்பரச்சைவ ப்ரஹ்மஜிஜ்ஞாஸுரேவ ச**

**பரம் ப்ரஹ்ம விஜானாதி தீரோ வேதாந்தபாஸ்கர: ।।**

சிரத்தையுடயவனும் பிரம்மத்தையே அடைய வேண்டும் என்கிற ஆவல் உடையவனும், தீரனும் ஆகிய சாதகனால் மட்டும்தான் பரப்பிரம்மத்தை சரியாக அறியமுடியும்.

## 32. இவனுக்கே ஞானப் பிராப்தி

**யமேவைஷ வ்ருணுதே தேன லப்ய: ।**

**காடகோபநிஷத் 1-2-23**

*எவன் ஆத்மாவையே தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தீவிர ஆவலுள்ளவனோ அவனுக்கு மட்டும்தான் ஆத்மா கிடைக்கிறான்.*

ஆத்மாவை அடைவதற்கு செய்யவேண்டியது என்ன ? ஜபமா ? பூஜையா? வேதாத்தியயனமா ? தீர்த்த யாத்திரையா ? ஆத்மாவை அடைய வேண்டும் என்கிற தீவிர ஆவலே ஆத்மாவைக் கொடுக்கிறது. ஆத்மாவைத் தவிர வேறு எந்த பொருளும் தேவையில்லை-என்கிற தீவிர எண்ணம் இருந்தால் அவனுக்கு ஆத்மா கிடைத்தே தீரும்.

ஆத்மா என்றால் சொரூபம். நம்முடைய சொரூபமாகிய ஆத்மாவை வெளியில் தேடுவது மூடத்தனம் அல்லவா? நித்தியமாய் இருக்கக் கூடிய ஆத்மாவைப் புதிதாக அடைய வேண்டியதில்லை. ஆத்மா இருப்பதனால் தான் சரீரம், இந்திரியங்கள், பிராணன், மனது முதலானவைகள் இருக்கின்றன. ஆத்மாவினால் தான் இந்த பிரபஞ்சமே இருக்கிறது. இந்த ஆத்மா வேதாந்தத்தில் பிரம்மம் என்று சொல்லப்படுகிறது. இதை அடைவது என்றால் ஆத்மாவை அறிவதே ஆகும். இந்த இரகசி யத்தைத் தெரிந்து கொண்டவனுக்கு ஆத்மா கிட்டும்.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# அதர்வண வேத ப்ருத்வீ ஸூக்தம் 2

## விஸ்வ கீதம்

*மாயிற்றோ அதில் எம்மைச் சேர்த்துவிடு. எம்மைப் புனிதமாக்கு. அவள் அன்னை. நான் அகில மகன். பர்ஜன்யன் பிதா, எம்மைக் காக்கவும் 12*

*வேதியை எந்த வையகத்தில் சூழ்ந்துள்ளார்களோ, கர்மம் செய்யும் மானுடர்கள் இந்த வையத்தில் உள்ளார்களோ, உயரமாய் யூபஸ்தம்பங்கள் எவ்வுலகில் ஸ்தாபிக்கப்பாட்டுள்ளனவோ அந்த பூ மாதா வளர்ந்து எம்மை ஓங்கச்செய்வாளாக.13*

*பூமித்தாயே ! எம்முடன் யுத்தம் செய்பவன், எம்மைத் த்வேஷிப்பவன், கோரமான ஆயுதத்தாலும் மனத்தாலும் எமக்குத் துன்பம் செய்பவனை எம் வசமாக்கு.14*

*தாயே மானிடர்கள் உன்னிடத்தில் ஜனனமாகின்றனர். உன் மேனியிலே சலனமும் செய்கின்றனர். நீ இருகால் நாற்கால் ப்ராணிகளைத் தரிக்கின்றாய். உதய சூர்யன் அமுதமான் சோதியை உன் மேனியில் விசாலம் செய்கிறான், அதில் இந்த பஞ்ச மானவர்கள் உன் ப்ரஜைகள் ஆவர். 15*

*அந்த சர்வ ப்ரஜைகளும் ஒன்று சேர்ந்து எமக்குப் பாலைத் தருக, பூமித் தாயே நீ எனக்கு வாக்கில் தேனைத் தா . 16*

*தாயே ஔஷதங்கள் உன் வயிற்றில் ஜனனமாகும். தர்மத்தால் நீ தரிக்கிறாய். சதா காலம் உன்னிடத்தில் ஸுகம் உண்டு. மங்களம் உண்டு. அவைகளில் நாங்கள் நடக்க வேண்டும். 17*

*நீ பெரியவள். வசதி உள்ளவள். உன் குலுக்கமும் நடுக்கமும் பெரியன. இந்த்ரன் உன்னைப் பாலிக்கிறான். பூமியே பொன்னுக்குச் சமமாய் ப்ரகாசிக்கிறாய். எவனும் எம்மை வெறுக்காமலிருக்கட்டும். 18*

*அக்னி பகவான் ஓஷதிகளில் உள்ளான். ஜலங்கள் அக்னியைத் தரிக்கும். கல்லிலும் மானிடர்களிலும் அந்த அக்னி உள்ளான். அந்த அக்னி பசுக்களிலும் உண்டு. 19*

*அக்னி சோதியினின்று தபிக்கிறான். விசாலமான வானம் அக்னியுடையது. மானவர்கள் இந்த அக்னியை அவி சுமப்பவனாகவும், க்ருதம் இச்சிப்பவனாகவும் எழுப்புகிறார்கள். 20*

*(தொடரும்)*

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 21

## ஸ்ரீ பிரகாசாத்மர்

ஸ்ரீ பத்மபாதரின் 'பஞ்சபாதிகா' வைப் பிரபலப்படுத்தியவர்களில் ஸ்ரீ பிரகாசாத்மர் முதலிடம் வகிக்கிறார். 'பஞ்சபாதிகா' விவரணம் என்ற உரை எழுதி இதன் மேன்மையை கற்றோர்களும், மற்றோரும் வியக்கும் வண்ணம் அறிய வைத்தவர் இவர். அத்வைத ஸம்ப்ரதாயத்தின் விவரண ப்ரஸ்தானத்திற்கு இவரே மூலகர்த்தா எனலாம். இவரது காலம் சற்றேறக்குறைய கி.பி. 1200 என்று அறியப்படுகிறது. இவரைப் பின்தொடர்ந்து வந்த அத்வைத ஸம்பிரதாய பிரவர்த்தகர்கள் அனைவரும் இவரை 'விவரணகாரர்' என்றே குறிப்பிடுகின்றனர். இன்றும் ஸந்யாஸிகளால் செய்யப்படும் வியாஸ பூஜையில் பிரம்ம வித்யாசார்ய பரம்பரையில் இவர் தனியே பூஜிக்கப்படுகிறார். இவரது 'பஞ்சபாதிகா விவரணத்திற்குப்' பலர் உரை எழுதியுள்ளனர். இவற்றுள் 'ஸ்ரீ அகண்டானந்த முனி'யால் எழுதப்பட்ட 'தத்வ தீபனம்' சிறந்ததாகக் கருதப்படுகிறது. 'சாரீரக ந்யாஸ ஸங்க்ரஹம்', 'சாப்த நிர்ணயம்', 'லௌகிக ந்யாய ஸங்க்ரஹம்' என்ற இவரது மற்ற மூன்று நூல்களும் அத்வைத சித்தாந்தத்திற்கு பெரிதும் உரமூட்டும் நூல்களாக அமைந்திருக்கின்றன. ஸ்ரீ சங்கரர் வேதாந்த ஸூத்ரங்களுக்கு 'சாரீரக மீமாம்ஸா பாஷ்யம்' எழுதினார். இதற்கு ஸ்ரீ பத்மபாதர் 'பஞ்சபாதிகா' உரை எழுதினார். இதற்கே ஸ்ரீ பிரகாசாத்மர் விவரணம் என்ற உரை எழுதினார்.

ஸ்ரீ பிரகாசாத்மரின் நூல்களைத் தொடர்ந்து வந்த பற்பல நூல்களும் இவர் முன் வைத்த வாதங்களையே முழுவதுமாகச் சார்ந்துள்ளன. 'ஸ்வபிரகாசானுபவர்' என்பது இவரது இயற்பெயராக அறியப்படுகிறது. 'அநன்யானுபவர்' என்பவர் இவரது குருவாக அறியப்படுகிறார்.

புத்தமதத்தின் மஹாளயப் பிரிவின் வாதங்களை அறிவுபூர்வமாகக் கண்டித்து, அவற்றின் பொய்மையை நிரூபித்தார். கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீ பாரதி தீர்த்த வித்யாரண்யர் என்பவர் பஞ்சபாதிகா விவரணத்திற்கு 'விவரண ப்ரமேய ஸங்க்ரஹம்' என்ற பெயரில் ஒரு உரை எழுதியுள்ளார். மூல ஆசிரியரும் உரையாசிரியரும் 'ஜீவன் முக்தி' நிலை பற்றி விஞ்ஞான பூர்வமாக விவரித்துள்ளனர். ஸ்ரீ பிரகாசாத்மர் ஜீவன்முக்த நிலை அடைந்த ஒரு ஞானி உலகில் எவ்வாறு இருப்பான், எவ்வாறு செயற்புரிவான் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். **'ஞானாக்னி: தக்த கர்மாணி'** , என்றபடி பிறவிக்குக் காரணமாக அமைந்த பிராரப்த கர்மா நீங்கலாக

மீதியுள்ள ஸஞ்சித கர்மா எரிந்து விடுகிறது. ஸஞ்சிதம் எரிந்துவிட்டதால் ஞானம் வந்தபிறகும், உடல் இருக்கும் வரையில் செய்யப்படும் கர்மங்களுக்கான பலன் சென்று சேர இடமில்லாததால் 'ஆகாமி' எனப்படும் கர்ம பலனும் சேர வழியில்லை. பிறவிக்குக் காரணமான பிராரப்த கர்மா மட்டும் உடல் இருக்கும் வரையில் இருக்கும்.

**தத்வ ஞானம் -** மூல அவித்யையை நீக்கி விடுகிறது. சரீரேந்திரியங்களின் பொய்மையை நிரூபித்த ஞானம் நீங்குவதில்லை. ஜீவன் முக்த நிலையை அடைந்த பிறகும் பிராரப்த கர்மா இருக்கிறது. வாஸனையாகிய ஸம்ஸ்காரங்கள் இருக்கின்றன. உடல் தோன்றிக் கொண்டிருக்கும். ஈர மண் சாலையில் நடந்து சென்ற பின்னரும், காலடிச் சுவடுகள் அழியாமல் பதிந்திருப்பது போல் உடலின் இருப்பு இருக்கும்.

சென்ற இதழில் பார்த்த ஞான கணபாதருக்கு இவர் ஸமகாலத்தவர். பிரகாசாத்மரின் குருவான 'அநன்யானுபவரி'டம் இவரும் சீடராக வந்து கற்றார். ஸ்ரீ ராமானுஜர் தனது ஸூத்ர பாஷ்யத்தில் இவரது கருத்துக்கள் சிலவற்றை எடுத்தாள்வதால் இவர் ஸ்ரீ ராமானுஜர் காலத்திற்கு முன்னர் (அதாவது கி.பி.1000க்கு முன்) இருந்திருக்க வேண்டும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவரது நூல்கள் தவிர இவரது வரலாறு பற்றிய விவரங்கள் அதிக அளவில் கிடைக்கவில்லை. கி.பி. 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'தர்மராஜ அத்வரீந்த்ரர்' தனது 'வேதாந்த பரிபாஷா' எனும் நூலில் பிரகாசாத்மரின் கருத்துக்களை முறைப்படுத்தி விவரித்துள்ளார்.

இவரது 'பஞ்சபாதிகா விவரணம்' பேராசிரியர் பி. எஸ். சாஸ்திரி என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு திருமலா திருப்பதி தேவஸ்தான நிதி உதவியுடன் ஆந்த்ர மாநிலத்தில் 'ஸாதனா க்ரந்த மந்திர்' அமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ளது. அத்வைத ஸம்பிரதாயத்திற்கு உரமூட்டி, மெருகூட்டி வளர்த்த ஆசார்யர்களுள் தொடர்ந்து வருபவர் ஸ்ரீ ஹர்ஷர்.

(தொடரும்)

# வேத, ஆகம நெறிகளைப் பின்பற்ற வேண்டும்

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

வடமொழியும், தமிழ்மொழியும் நெருக்கமான உறவு கொண்டவை. இன்றைய பிரச்சினைகளை மனதில் வைத்து அம்மொழிகளுக்கு இடையில் பகை வளர்ப்பது தவறென்றே கருதுகிறேன்.

அது மட்டும் அல்லாமல், நமது சைவ சமயத்தின், சாத்திர, தோத்திர நூல்கள் அனைத்தும் வேதத்தை முதல் நூலாகவும், ஆகமத்தைச் சிறப்பு நூலாகவும் ஏற்று வலியுறுத்தியிருக்கின்றன. இவ்விரண்டு நூல்களையும் இறைவனே படைத்தான் என்பதே அருளாளர்களின் கருத்தாய் இருக்கிறது. இறைவனால் படைக்கப்பட்ட அந்த நூல்களை நிராகரிக்கும் உரிமை நிச்சயம் எவருக்குமில்லை !

வேதங்கள், ஆகமங்கள் பற்றியும் வேள்விகள் பற்றியும் எங்களது தமிழிலும், சைவத்திலும் பரவலான பதிவுகள் உண்டு

சங்க இலக்கியங்களில் - புறநானூற்றில் வரும்

**‘பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்**
**நாஅல் வேத நெறிதிரியினும் திரியாச் சுற்றமொடு**
**முழுது சேண் விளங்கி’**

போன்ற பல பாடல்களில் வேதம் பற்றிய செய்திகள் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதியவரின் பெயரை ‘நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்’ என்றே குறிப்பிடுகிறார்கள்.

சதுர்வேத பண்டிதராகச் சங்க காலத்திலேயே தொல்காப்பியர் பாயிரம் பெற விரும்பியிருக்கிறார் ஒருவர் விளங்கியிருந்தார் என்பதையும், அவரிடமே என்பதையும் இதன் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம். அது போலக் காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தில், கண்ணகியின் திருமணம் வேத முறைப்படி நடந்ததை, ‘மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலஞ் செய்வது’ என்ற வரிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. சங்கப் புலவராகிய நக்கீரர் தனது திருமுருகாற்றுப்படை எனும் நூலில் **‘ஒருமுகம் மந்திர விதியின் மரபுளி வழாஅது அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே’** என்றும் **‘நூற்றுப்பத்தடுக்கிய நாட்டத்து**

**நூறுபல் வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து'** என்றும் வேதங்கள் பற்றியும், வேள்விகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

**திருமூலர்**



இவர், தான் இயற்றிய திருமந்திரத்தில்

**'வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்'** எனவும்

**'வேதங்கள் ஆட மிகும் ஆகமம் ஆட நாதன் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே''**

எனவும் வேதங்கள் பற்றிக் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்லாது, வேதத்தை விட்ட அறம் இல்லை என்றும், வேதம் பற்றித் தர்க்கவாதம் செய்தல் கூடாது என்றும் இவர் வலியுறுத்தியும் உள்ளார் ('வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின் ஓதத் தகும் அறம் எல்லாம் உள. தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே').

அதுமட்டுமல்லாமல் வேதம், ஆகமம் பற்றித் தனித் தலைப்பிட்டே திருமூலர் அவற்றைக் கொண்டாடியும் இருக்கிறார்.




**காரைக்கால் அம்மையார்**

இவர் தனது திரு இரட்டை மணிமாலையில்

**'வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்கு ஆதியனை ஆதிரை நன்னாளானை'**

எனச் சிவனை வேதமாகவும், வேத முதலாகவும் குறிப்பிட்டுள்ளார்.




## திருஞானசம்பந்தப் பெருமான்

இவர் தனது பதிகங்களில்

**'வேதத்தில் உள்ளது நீறு'** என்றும், **'வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு'**

என்றும், பல இடங்களிலும் வேதம் பற்றியும், வேள்விகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமல்லாமல் **'வேத வேள்வியை நிந்தனை செய்து உழல் ஆதமில்லி அமனொடு தேரரை'** என்று வேதாகமங்களை வெறுத்த சமண, சாக்கியர்களைப் பதிகந்தோறும் பத்தாவது பாடலில் சாடிப் பாடியதோடு, **'மாசுமெய்யர் மண்டைத்தேரர், குண்டர், குணமிலிகள் பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி அந்நெறி செல்லன்மின்!'** என்று நமக்கு அறிவுரையும் கூறியுள்ளார்.

## திருநாவுக்கரசர்

'வேதங்கள் நான்கும் கொண்டு விண்ணவர் பரவி ஏத்த, பூதங்கள் பாடி ஆடல் உடையவன் புனிதன் எந்தை' எனவும், **'வேதியா! வேதகீதா! விண்ணவர் அண்ணா! '** எனவும், **'வேதம் ஓதி வந்து இல் புகுந்தார் அவர்'** எனவும், **'வேத நாயகன் வேதியர் நாயகன் எனவும், 'வேதம் ஓர் நான்காய், ஆறு அங்கம் ஆகி'** எனவும் தனது தேவாரங்களில் பல இடங்களில் வேதங்களை அங்கீகரித்துப் பாடுகிறார்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

**‘வேதம் ஓதி, வெண்நீறு பூசி, வெண் கோவணம் தற்று’** எனவும், **‘வேத வேதியர், வேட நீதியர்’** எனவும், **‘வேதியர் விண்ணவரும் மண்ணவரும்தொழ’** எனவும் பல இடங்களில் வேதத்தை அங்கீகரித்து இவரும் பாடுகிறார்.

## மாணிக்க வாசகர்

இவர் தனது திருவாசக நூலில், **‘வேத மொழியர், வெண் நீற்றர், செம்மேனியர்’** என்றும், **‘வேதமும், வேள்வியும், ஆயினார்க்கு’** என்றும், **‘வேதி, போற்றி! விமலா, போற்றி!’ என்றும், ‘ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க’** என்றும், **‘இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்’** என்றும் பல இடங்களில் வேத ஆகமங்களைப் போற்றிப் பாடியுள்ளார்.

## சேக்கிழார்

இவரும் **‘வேத நெறியின் முறைபிறழா மிக்க ஒழுக்கம் தலைநின்ற சாதி நான்கும்’** என்றும், **‘வேத நெறி தழைத்தோங்க! மிகு சைவத் துறை விளங்க’** என்றும், **‘வேதங்கள் மொழிந்தபிரான்’** என்றும் வேதங்களைப் பல இடங்களிலும் பாராட்டிப் பாடியுள்ளார்.

இப்படியாக நம் தமிழின் பெரும் புலவர்களும், நாயன்மார்களும் வேதங்களையும், ஆகமங்களையும் போற்றிப் பாடியிருக்க குறைமதியாளர்களின் கருத்துகளைக் கேட்டு அந்தத் தெய்வ மறைகளைக் கைவிடுவது என்பது நம்மினத்துக்கு நாம் செய்யும் மாபாதகம் ஆகிவிடும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

திருமுறைகளை ஓதித் தமிழில்தான் கும்பாபிஷேகங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்வோரிடம் முக்கியமான இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது.

நீங்கள் சொல்லும் திருமுறைகளைப் பாடிய அருளாளர்களே, தாம் பாடிய திருமுறைகளில் வேதங்களையும், ஆகமங்களையும் போற்றிப் பாடியிருக்க, அவற்றைக் கைவிடச் சொல்வது

எப்படி நியாயமாகும்? உண்மையாக நீங்கள் திருமுறைகளைப் போற்றுகிறீர்கள் என்றால் அவை போற்றிப் பாடியிருக்கும் வேத, ஆகமங்களையும் போற்ற வேண்டும் அல்லவா? - முதற் கேள்வி.

திருமுறைகளைப் கும்பாபிஷேகத்தைச் செய்ய வேண்டும் என்று வாதிடும் நீங்கள், ஆலயங்கள் கட்டும் முறைமை, விக்கிரகங்கள் அமைக்கும் முறைமை, யாகங்கள் செய்யும் முறைமை என்பவை பற்றியதான வரையறைகள் திருமுறைகளில் எங்கேனும் சொல்லப்பட்டிருப்பதாய்க் காட்டுவீர்களா?

மேற்சொன்னவற்றை எல்லாம் நாம் வேத, ஆகமங்களில் இருந்து தானே தெரிந்து கொள்கிறோம். ஆகம முறைப்படி கட்டிய ஆலயங்களின் கும்பாபிஷேகத்தை ஆகம மந்திரம்

சொல்லிச் செய்யக்கூடாது என்பது எப்படி நியாயமாகும்? - இது இரண்டாவது கேள்வி. இவர்களைப் போன்றோர் மொழிப்பற்றைப் பேசிப்பேசி மொழியை முடிந்தளவு தாழ்த்தி விட்டனர்.

இனி அதைச் சமயத்திலும் கொண்டு வந்து அதனையும் தாழ்த்தப் பார்க்கிறார்கள் போல. உண்மைச் சைவர்கள் இவர்களைப் புறந் தள்ளிவிட்டு வேத, ஆகம நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே எனது கருத்து!

**நான்மறை அறங்கள் ஓங்க!**
**நற்றவம் வேள்வி மல்க!**
**மேன்மைகொள் சைவ நீதி**
**விளங்குக உலகம் எல்லாம் !**

- கச்சியப்பர் (கந்த புராணம்)

(நன்றி : கலைமகள்)


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

# VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி



பல வருடங்களுகு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி இது. ஒரு வெள்ளிக்கிழமை. ஸுமங்கலி பூஜைக்காக பல ஸுமங்கலிகள் நின்று கொண்டிருந்தனர். ஒரு பெண் நெற்றியில் குங்குமம் இல்லாமல் இருந்தாள். அவளை பெரியவா கை ஜாடையால் அருகில் வர பணித்தார். ஆனால் கண்ணீர் வழிய அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

வேறு ஒருவரை அவளிடம் அனுப்பி நெற்றியில் ஏன் குங்குமம் தரிக்கவில்லை என்று கேட்கச் சொன்னார். அவள் கணவன் யுத்தத்தில் இறந்து விட்டதாகவும் ஆறுமாத காலமாகிவிட்டதாகவும் கர்மாக்களை எப்படிச் செய்ய வேண்டும் எனபதைத் தெரிந்து கொள்ள வந்ததாகவும் கூறினார். உடனே பெரியவா கை நிறைய குங்குமத்தை அவளிடம் கொடுக்கச் சொல்லி அவள் கணவன் உயிரோடு உள்ளார் என்றும் சீக்ரம் வருவார் என்றுச் சொன்னார்கள்.

அதேமாதிரி அடுத்த மாதம் அவளுடைய கணவன் வந்தார். அவர்கள் குடும்பத்துடன் ஸ்ரீசரணர்களைத் தரிசனம் செய்து ஆசி பெற்றனர். ஆனந்த புஷ்பத்துடன் அவர்கள் பெரியவாளை

*நமஸ்கரித்தனர்.*

*மஹா பெரியவாளால் ஸன்யாஸம் பெற்ற திருவாரூர் ஸ்வாமிகள் திருவாரூரில் இருந்தார். 1986ஆம் ஆண்டு அவருடைய உடல் நிலை மோசமாகியது. இதைக் கூற காஞ்சீபுரத்திற்குச் சென்றேன். அதைக் கேட்ட பெரியவா ' நீ தான் அவருக்கு எல்லாம் செய்ய வேண்டும். க்ராப்பை எடுத்துவிட்டு சிகை வைத்துக் கொள். உன் பெயரில் அவருக்காக இடம் வாங்கி அங்கே அவருக்கு சித்தி ஸ்தலம் செய்ய வேண்டும் என்றார், அதற்குள் சற்று அவருக்கு உடம்பு தேறியிருந்தது. அப்போதைக்கு ஆபத்து இல்லை. என்று தெரிந்து கொண்டேன். திருவாரூரில் இடம் வாங்குவதற்கு ஒருவரிடம் கூறி வைத்தேன்.*

*ஒரு ஞாயிறு என் தங்கை பூதனூரிலிருந்து கூத்தனூருக்குப் போக வந்திருந்தாள். நாங்கள் கிளம்பும் ஸமயம் திருவாரூர் ஸ்வாமிகள் சித்தி அடைந்து விட்டதாகச் செய்தி வந்தது. அதிர்ச்சி அடைந்த நாங்கள் திருவாரூருக்குச் சென்றோம். என் நண்பர் சேகரிடம் ஸ்வாமிகளின் ப்ருந்தாவனத்திற்கு இடம் பார்க்கச் சொன்னேன். யாரும் இடம் தரவில்லை. அதற்குப் பதிலாக மேல் பூதனூரில் இடம் கிடைத்தது. அது பற்றி பெரியவாளுடன் மேனேஜர் மூலம் போனில் தொடர்பு கொண்டேன். பெரியவாளும் ஆசீர்வதிக்க உடனே அங்கே குளக்கரை அருகில் கார்யங்கள் செய்து முடித்தேன். க்ராம ஜனங்களும் ஒத்துழைத்தனர்.*

*பல மாதங்களுக்குப் பிறகு அந்த இடத்தைப் பற்றி எண்ணம் வந்தது. அந்த இடம் என் பெயரில் இருந்த சொந்த இடமே என்று அறிந்தேன். ஆச்சர்யம்!. 'நீ சிகை வைத்துக் கொள், திருவாரூர் ஸ்வாமிகளுக்கு உன் பெயரில் இடம் வாங்கு, நீ தான் ஸ்வாமிகளுக்கு எல்லா கார்யமும் செய்ய வேண்டும்' என்று பெரியவா சொன்னதின் தாத்பர்யம் புரிந்தது. என்னே அவரது தீர்க தர்சனம்.*

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## ૭. செவிகளும் கண்களும்

நமக்கு இறைவன் இரண்டு கண்களையும், இரண்டு செவிகளையும் கொடுத்துள்ளான். செவிகளினால் சப்தங்களைக் கேட்கவும், கண்களினால் காட்சிகளைப் பார்க்கவும் முடிகிறது. காது கேட்காதவர்கள் கூட எப்படியோ வாழ்க்கையை நடத்துகின்றனர். குருடராக இருந்தாலோ வாழ்க்கை மிகவும் கடினமே.

கண்களினால் வர்ணங்கள், உருவங்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மலை, நதி, காடு ஆகிய எல்லா இயற்கைக் காட்சிகளையும் பார்த்து ஆனந்தப்படுகிறோம். ஆகையால் கண் தான் நமக்குத் தெய்வம், பெரிய சம்பத்து என்றும் கூறலாம். **'ஸர்வேந்த்ரியாணாம் நயனம் ப்ரதானம்'** என்பது சான்றோர் வாக்கு.

செவிகளினால் உள்ள பயன் என்ன ? வேதாந்தங்களில் சொல்லியிருக்கும் உபதேசங்களைச் செவியினால் கேட்க முடியுமே தவிர கண்களினால் பார்க்க முடியாது. மனிதனுக்கு ஞானத்தைப் பெறுவதற்குச் செவிதான் முக்கிய சாதனம். பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் சொல்வதை மாணவர்கள் செவியால் கேட்கும் பொழுது தான் அர்த்தமாகிறது. அதேபோல் வேத சாஸ்த்திர உபதேசங்களையும் செவியால் தான் கேட்க வேண்டும்.

7997 வேதங்களில், **'பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா:,'** ஓ, தேவதைகளே! ஓ பரமாத்மனே! நாங்கள் செவிகளால் எப்பொழுதும் வேதோபதேசங்களை கேட்கும்படி ஆகட்டும் என்று தான் பிரார்த்திக்கிறார்கள். ஸத் விசாரங்களையும், உத்தம உபதேசங்களையும் சாதுக்களின் சந்தேசங்களையும் மீண்டும், மீண்டும் கேட்பதினால் தான் நமக்கு நல்ல அறிவு உண்டாகிறது அல்லவா ?

காதுகளுக்குக் கதவு இல்லை, ஏன் ? சதா சர்வ காலமும் நாம் நல்ல வார்த்தைகளையும் நல்ல உபதேசங்களையும் கேட்டுக் கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காக. ஆனால், கண்களுக்குக் கதவு இருக்கிறது. ஏனென்றால் தேவையானதை மட்டும் பார்ப்பதற்கும், கெட்டதைப் பார்க்காமல் இருப்பதற்கும் அல்லவா! ஆகையால், நாம் வேத சந்தேசங்களைச் சிரவணம் செய்து மேன்மை அடைவோமாக.

*(பூதனூர் பாப்பா)*

# ஆழ்வார்கள் சரித்ரம்

*திருமழிசை ஆழ்வார்*

*ஆழ்வார்களிலேயே இந்த ஆழ்வார் சிறப்பு வாய்ந்தவர். மற்ற ஆழ்வார்கள் போலல்லாமல் எம்பெருமானைப் பாடாமல் தன் குருவான நம்மாழ்வாரைப் பாடினவர். பாசுரங்களும் பதினொன்றே.*

*தாமிரபரணி ஆற்றங்கரையில் திருக்குருகூர் ஆழ்வார் திருநகரி உள்ளது. அதனருகில் திருக்கோளூர் ஊர் அமைந்துள்ளது. சாம வேதம் ஓதும் அந்தணர் குலத்தில் இவரது ஜனனம். இளம் வயதிலேயே வேதங்கள் பயின்றார். மதுரமாக பாட வல்லார். வட தேச யாத்ரை செய்த இவர் அயோத்தியில் தங்கினார்.இருப்பினும் திருக்கோளூர் பெருமானை நினைத்து வழிபட்டு வந்தார்.*

*பகவத் ஸங்கல்பமாக ஒரு நாள் தெற்கே ஓர் ஒளி தோன்றியது. அதிசயம் நடக்கப் போகிறது என்று ஊகித்து அதை காண விரைந்து வந்தார். ஒளி நம்மாழ்வார் ஜனனம். திருக்குருகூரில் நம்மாழ்வார் யோக நிலையில் இருப்பதைப் பார்த்து ஒளியின் காரணத்தை அறிந்தார். யோக நிலையில் இருந்த நம்மாழ்வாரிடம் நீங்கள் தான் என் குரு. உபதேசம் செய்ய வேண்டும் என்றார். அவர் பதில் தரவில்லை.*

*அவரது கவனத்தை ஈர்க்க ஒரு பெரிய கல்லை அவர்முன் எறிந்தார். அந்த சப்தத்தால் கண் விழித்த நம்மாழ்வாரின் பாதங்களில் விழுந்து சேவித்தார். பின்பு நம்மாழ்வாரிடம்* ***'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்'*** *என்று வினவ அதற்கு நம்மாழ்வார் முதன் முதலாக வாய் திறந்து* ***'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்',*** *என்றார். அன்று முதல் நம்மாழ்வாரையே தனது குருவாகவும் தெய்வமாகவும் வழிபட்டார். கடவுளைப் பாடவில்லை.*

*தனது குருவான நம்மாழ்வார் மீது* ***'கண்ணி நுண் சிறுதாம்பினால்'*** *என்று பாடினார். இவரது பதினொன்று பாடல்களை 12000 முறை மனம் ஒருமைப்பட்டு பாடினால் நம்மாழ்வார் காக்ஷி தருவார் என்பது ஐதீஹம். நாதமுனிகள் அவ்வாறு செய்து நம்மாழ்வார் தர்சனம் செய்தது ப்ரத்யக்ஷம்.*

***சங்கப்பலகை தந்த பரிசு***

*தன் குரு நம்மாழ்வார் மறைந்த பின் அவர் அருளிய திவ்யப் ப்ரபந்தப் பாடல்களை*

எங்கும் பாடி பரப்பி வந்தார். புலவர்கள் இது கண்டு பொறாமை கொண்டு நம்மாழ்வார் சங்கப்பலகையில் ஏறி பாடவேண்டும். அப்போதுதான் பாடல்கள் உண்மையாகும் என்று கூறினர். மதுர கவி ஆழ்வார் ' நம்மாழ்வார் இப்போது உயிருடனில்லை. அவரது பாடல் வரிகளை பலகையில் வைப்போம். உண்மை தெரிய வரும் எனக் கூற அவர்களும் சம்மதித்தனர்.

சங்கப்பலகை விசித்ரமானது பாடலாசிரியரின் பாடல்களில் சொற்குற்றம் பொருட்குற்றம் இருப்பின் அவரைத தள்ளிவிடும். சொன்னது போல் முன்னூறு புலவர்கள் அதில் ஏறினர். **'கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திரு நாமம் திண்ணம் நாரணமே'** என்னும் நம்மாழ்வாரின் வரிகளும் அதில் இடப்பட்டது. சங்கப்பலகை முன்னூறு புலவர்களையும் நீரில் தள்ளீவிட்டு இந்த வரிகளுடன் மிதந்தது. முன்னூறு புலவர்களும் நம்மாழ்வாரின் பெருமையை உணர்ந்தனர். மதுர கவி ஆழ்வாரின் குரு பக்தி ஈடு இணையற்றது. அவரது பெருமையை போற்றி வாழ்த்தி வணங்குவோம்.

ஆழ்வார் தந்த பாடலின் முதல் பாடல்

**'கண்ணின் சிறுதாம்பு தாம்பினால் கட்டு உண்ண**
**பண்ணிய பெருமாயன் என் அப்பனில்**
**நண்ணித் தெங்குருகூர் நம்பி என்றக்கால்**
**அண்ணிக்கும் அமுது ஊறும் என் நாவுக்கே '**

**பொருள் :** பல முடிச்சுகளைக் கொண்ட உடம்பிலே அழுந்தும்படி சிறிய கயிற்றினால் யசோதை தன்னைக் கட்டும்படி செய்த பெரிய மாயன் என் அப்பனை அணுகி தென் குருகூர்த் தலைவன் ஆழ்வார் திருப்பெயரைக் கூறினால் தேன் என இனிக்கும், வாயினில் அமுதூறும்.

குருவே எல்லாம்

**நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்**
**புன்மையாகக் கருதுவர் ஆதலில்**
**அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்**
**உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே**

**பொருள் :** நன்றாய் படித்த வேதியர் என்னைக் கீழாய் கருதுவர். இருப்பினும் நம்மாழ்வார் எனக்கு அப்பனாய் அம்மையாய் ஆவர். என்னை ஆட்கொண்டவர். அவரே எமக்குத் தலைவர்.

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை 'மூக ஸாரம்' என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**कवित्वस्रीमिश्रीकरण निपुणौ रक्षणचणौ**
**विपन्नानाम् स्रीमन् नलिनमस्रुणौ शोणकिरणौ ।**
**मुनीन्द्राणाम् अन्त;करण शरणौ मन्द सरणौ**
**मनोग्यौ कामाक्ष्याया: दुरितहरणौ नौमि चरणौ ।।**

**கவித்வஸ்ரீமிஸ்ரீகரண நிபுணௌ ரக்ஷணசணௌ**
**விபன்னானாம் ஸ்ரீமன் நலினமஸ்ருணௌ ஸோனகிரணௌ**
**முனீந்த்ராணாம் அந்த:கரண ஸரணௌ மந்த ஸரணௌ**
**மனோக்யௌ காமாக்ஷ்யா: துரிதஹரணௌ நௌமி சரணௌ 73**

கவித்வஸ்ரீயை கூட்டிவைக்கும் நிபுணமுள்ளவையும், துன்பமுற்றவர்களை காப்பாற்றும் திறமையுள்ளவையும், அழகிய தாமரைபோல் எழிலுடையவையும், சிவந்த கானியுடையவையும், முனிவர்களின் அந்தகரணங்களை இருப்பிடமாய் உடையவையும், மென்மை உடையவளும், மனத்திற்கு இன்பம் தருபவையும், பாபங்களை அழிப்பவையுமான காமாக்ஷியின் சரணங்களை நமஸ்கரிக்கிறேன்.

परस्मात् सर्वस्मात् अपि च परयोर्मुक्तिकरयो:
नखश्रीभिर्ज्योत्स्ना कलित तुलयोस्ताम्रतलयो: ।
निलीये कामाक्ष्या: निगमनुतयोर्नाकिनतयो
निरस्तप्रोन्मीलन्नलिनमदयोरेव पदयो ।।

பரஸ்மாத் ஸர்வஸ்மாத் அபிச பரயோ:முக்தி கரயோ :
நக ஸ்ரீபிர் ஜ்யோத்ஸ்நா கலித துலயோஸ்தாம்ர தலயோ:
நிலீயே காமாக்ஷ்யா நிகம நுதயோ: நாகி நதயோ:
நிரஸ்தரோந் மீலந் நளிந மதயோரேவ பதயோ: 27

சிறந்த பொருள் அனைத்தினும் மிகச் சிறந்தவையும், முக்தி அளிப்பவையும் நகங்களின் காந்தியினால் நிலவொளியோடு ஒப்பிடத்தக்கவையும், சிவந்த அடித்தளத்தில் உடையவையும், வேதங்களால் துதிக்கப்பட்டவையும், தேவர்களால் வணங்கப்பட்டவையும், நன்றாக மலர்ந்த தாமரை மலர்களின் கொழுப்பை அடக்கியவையுமான காமாக்ஷியின் பாதங்கள் இரண்டிலுமே லயித்து அவற்றையே நிலயமாகக் கொண்டிருக்கிறேன்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்